# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஜனவரி 25, 2019. இதழ் - 48






விளம்பரங்களுக்கு

தொடர்பு : 071 399 909 1

arangamnews@gmail.com

**எம்.ஐ.எம்.சாக்கீரின் ''சம்மாந்துறை இடப்பெயர் வரலாறு''**

பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தின்


பக்கம் - 10



**கிழக்கு அபிவிருத்திக்கு கிடைத்த வாய்ப்பை தவறவிடக் கூடாது**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அக்கட்சியின் பொதுச்சபையின்...

பக்கம் - 04



**இலங்கையின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு கொள்கைகளில் நிதானம் தேவை**

பக்கம் - 03



**நாட்டுக்கு அதிக வருமானம் பெற்றுத்தந்தும் உரிய ஊதியமின்றித் தவிக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்**

பக்கம் - 06



# வடக்கு கிழக்கு உள்ளிட்ட மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்த இணக்கம்

--- அமிர்தசன் ---

வடக்கு கிழக்கு மாகாண சபைகள் உள்ளிட்ட அனைத்து மாகாண சபைகளின் தேர்தல்களையும் இந்த ஆண்டின் முற்பகுதியில் ஒரேநாளில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும் அதற்கு சம்மதித்துள்ளதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி மகிந்த ராஜபக்ச பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியினால் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

உரிய காலத்திற்குள் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அப்போது அரசாங்கத்திடம் வேண்டுகோளும் விடுத்திருந்தார்.

ஆனால் அரசியல் நெருக்கடி ஐம்பது நாட்கள் வரை நீடித்தமையினால் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. தற்போது சுமுகமான நிலைமை காணப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக பிரதான அரசியல் கட்சிகள் ஆலோசித்து வந்தன.

எனினும் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் முதலில் மாகாண சபைத் தேர்தல்களே நடத்தப்பட வேண்டும்

தொடர்ச்சி... (பக்கம் -02 )

# தரப்படுத்தப்பட்ட அதிபர்கள் நியமிப்பதை நிறுத்தவும்!

## ஆளுநரின் உத்தரவுப்படி கல்விச்செயலாளர் சுற்று நிருபம்

(காரைதீவு நிருபர் சகா)



கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் சேவையிலுள்ள கடமை நிறைவேற்று அதிபர்கள் பணியாற்றும் பாடசாலைகளுக்கு தரப்படுத்தப்பட்ட அதிபர்களை நியமிக்கும் நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆளுநரின் உத்தரவிற்கமைவாக கிழக்குமாகாணக் கல்விச் செயலாளர் முத்துபண்டா இவ்வுத்தரவை சுற்று நிருபமாக மாகாணக் கல்விப்பணிப்பாளர் மற்றும்வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இது தொடர்பாக இறுதித்தீர்மானம் எடுக்கும் வரையில் தற்காலிகமாக இந்நியமனத்தை இடைநிறுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# இலங்கையைச் சூழும் பாதுகாப்பு அழுத்தங்கள்



இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பு மேலும் பதற்றநிலையை அண்மித்து வருவதாக ஆய்வாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

வட்டகை நாடுகளுக்கிடையிலான இராணுவப் போட்டி காரணமாக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இந்தப் பிராந்தியத்தில் தமது கடற்படை பிரசன்னத்தை அதிகரித்து வருவது

தொடர்ச்சி... (பக்கம் -02 )




ஊழலை ஒழிப்போம்!

அதற்கு எதிராக குரல்கொடுப்போம்

தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற

அழையுங்கள்

011 2 501 503

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எல்பேங்க் வீதி, கொழும்பு - 05

தொடர்ச்சி...

## இலங்கையைச் சூழும் பாதுகாப்பு அழுத்தங்கள்

இதற்கு காரணமாகக் கூறப்படுகின்றது.

தனது அண்மைய வட்டாரத்தில் சீனக் கடற்படையின் பிரசன்னம் அதிகரிப்பது குறித்தும், இலங்கை முதல் பாகிஸ்தான் வரையிலான அரைச்சுற்றுவட்டத்தில் சீனா வணிக துறைமுகங்களை அமைப்பது குறித்தும் இந்தியா அச்சமடைந்துள்ளது. இந்த வணிக துறைமுகங்கள் கடற்படை மையங்களாக சீனாவால் பயன்படுத்தப்படலாம் என்றும் இந்தியா அச்சம் கொண்டுள்ளது. மலாக்க நீரிணைக்கு நுழைவாயிலாக உள்ள அந்தமான் பகுதிகளில் குறிப்பாக போர்ட் பிளயரில் கடற்படையின் விமானத்தளம் ஒன்றை அமைக்க இந்தியா திட்டமிடுகின்றது. அந்தப் பகுதியில் இருந்து சீனாவால் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்வதே இந்த தளத்தின் நோக்கமாகும். இது கடற்படையின் ஒரு விமானத்தளம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சீனப்பிரசன்னம் இலங்கைக்கு கிழக்காக உள்ள கடலில் அதிகரித்திருப்பதாக இந்தியா அச்சம் கொள்கிறது. அதேவேளை அமெரிக்காவும் இந்து சமுத்திர பிராந்திய சீன பிரசன்னத்தை மனதில் கொண்டு இலங்கையுடனான ஏசிஎஸ்ஏ ஒப்பந்தத்தை விரிவுபடுத்தவுள்ளது. இதன் மூலம் இலங்கையின் வணிகத்துறைமுகங்களில் தமது இறங்கு தளங்களை செயற்படுத்த அமெரிக்காவால் முடியும்.

இந்த சீனா இலங்கையில் துறைமுகங்களை கொண்டுள்ளதுடன், கடற்பிராந்தியத்தில் தனது பிரசன்னத்தையும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இது யப்பான், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளை அச்சமடைய வைத்துள்ளது.

அதன் அடிப்படையிலேயே சீனாவுக்கு எதிரான நாடுகள் இலங்கையை



சூழ்ந்த பிரதேசங்களில் தமது கடற்படைக் கப்பல்களையும் ஏனைய பிரசன்னத்தையும் அதிகரித்து வருகின்றன.

இதன் காரணமாக இலங்கை அமைந்துள்ள இந்து சமுத்திரப் பிராந்தியம் மிகவும் ஆபத்தான நிலையை நோக்கி சென்று கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் அஞ்சுகிறார்கள்.

## பாடசாலைகளில் பெற்றோர்களிடமிருந்து பணம் பெறப்படுவதை தடுக்க நடவடிக்கை

பாடசாலைகளில் பெற்றோர்களிடம் இருந்து பணம் பெற்றுக்கொள்வதை தடுப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அக்கில விராஜ் காரியவசம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பெற்றோர்களிடம் இருந்து பாடசாலை நடவடிக்கைகளுக்காக பணம் சேகரிக்கப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென தேசிய பாடசாலைகள் தொடர்பில் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்காக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான முறைப்பாடுகளை கே.ஜீ.சீ.மகேஷிக்கா, உதவி கல்விப் பணிப்பாளர், தேசிய பாடசாலைக் கிளை, கல்வியமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும் பெற்றோர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அண்மையில் இடம்பெற்ற அதிகாரிகளுடான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இதுதொடர்பாக தெரிவிக்கையில் . பணம் சேகரிப்பது தொடர்பில் கல்வியமைச்சு வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அனைத்து அதிகாரிகளும் செயற்பட வேண்டும்.

இலவசக் கல்வியின் நன்மைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் பெற்றோர்கள் மீது தேவையில்லாத அழுத்தங்களைக்கொடுக்கும் இவ்வாறான செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் அமைச்சர் கூறினார்.

## அரசாங்க தகவல் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களுக்கான போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் பணிப்புரைக்கமைய அமுல்படுத்தப்படும் தேசிய போதைப்பொருள் தடுப்புவாரத்தை முன்னிட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றுவருகின்றது.

இந்த வரிசையில் அரசாங்கத் தகவல் திணைக்களம், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் அனுசரணையில் பாடசாலை மட்ட மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கொன்றினை கடந்த புதன்கிழமை (23) மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடாத்தியது.

மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக இக்கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்தார்.

மாவட்ட தகவல் அதிகாரி வ.ஜீவானந்தனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் மற்றும் சர்வதேச தொண்டர் அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இச்செயலமர்வில் போதைப்பொருள் பாதிப்புக்கள், சமூக மட்டத்தில் இளம் சமுதாயம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் இலங்கையில் போதைப்பொருள் பாவனைக்கு அமுல்படுத்தப்படும் சட்டவாக்கங்கள் பற்றிய விரிவான செயல்முறையிலான விளக்கவுரைகள் இடம்பெற்றன.

இக் கருத்தரங்கில் புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்கழகத்தினால் போதைப்பொருள் பாவனைக்கு விற்பனையாளர்களா, பாவனையாளர்களா காரணம் என்ற தலைப்பிலான பட்டிமன்றம் கழகத்தின் தலைவர் இன்பராசா தலைமையில் நடைபெற்றது.

வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலை மன நல வைத்தியர் யூடீ.ரமேஷ் ஜெயக்குமார் போதைப்பொருள் பாவனையும், அதன் உடல், உள சமூகத் தாக்கங்களும் என்ற தலைப்பில் விளக்கவுரை வழங்கினார்.

பொதைப்பொருளுக்கு அடிமையாதல், அதற்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு என்ற தலைப்பில் மட்டக்களப்பு விமோச்சனா இல்லத்தின் பணிப்பாளர் திருமதி செல்விகா சகாதேவன் கருத்துரை வழங்கினார்.

அத்துடன், போதைப்பொருள் பாவனையும் சிறுவர் துஸ்பிரயோகமும் என்ற தலைப்பில் மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் வி.குகதாசன் விளக்கவுரை வழங்கினார்.

இந்நிகழ்விற்கான அனுசரணையினை மட்டக்களப்பு காவியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் வழங்கியிருந்தது.

இக் கருத்தரங்கில் 250க்கும் மேற்பட்ட மட்டக்களப்பு நகரம் மற்றும் நகரையண்டிய பிரதேச பாடசாலைகளின் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் பங்கு கொண்டனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனாதிபதியின் சுற்றறிக்கைக்கமைய சகல அரச திணைக்களங்களும்



தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரத்தை முன்னிட்டு பல்வேறு ஒழிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை போதைப்பொருள் தடுப்பு பாடசாலை வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பாடசாலை மாணவர்கள் போதைப்பொருளினால் எதிர்கால சமுதாயம் பாதிக்கப்படுவதனால் ஏற்படும் தீமைகள் பாதுகாப்பதற்கான வழிகள், ஆலோசனைகளையும் வழங்கும் வகையில் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி...

## வடக்கு கிழக்கு உள்ளிட்ட மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்த இணக்கம்

என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. உள்ளிட்ட அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

இந்த நிலையில் முதலில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த இணக்கம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவு கிடைத்ததும் மாகாண சபைத் தேர்தல்களுக்கான அறிவிப்பு வெளியிடப்படும் என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஆட்சேபணை இல்லையென ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர், அமைச்சர் ஹபீர் ஹாசீம் கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

கொழும்பை மையப்படுத்திய மேல்மாகாணம், அம்பாந்தோட்டையை மையப்படுத்திய தென் மாகாணம் ஆகியவற்றின் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவடைகின்றது. பதுளையை மையப்படுத்திய ஊவா மாகாண சபையின் பதவிக் காலம் ஏப்ரல் மாதம் நிறைவடையவுள்ளது.

ஆகவே இந்த மூன்று மாகாண சபைகள் உள்ளிட்ட ஒன்பது மாகாண சபைகளின் தேர்தல்களையும் ஒரேநாளில் நடத்த ஏற்பாடுகள் இடம்பெறவுள்ளதாக பிரதான அரசியல் கட்சிகளின் தகவல்கள் கூறுகின்றன.

புதிய தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தல்களை நடைபெறாது எனவும் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார முறைப்படியே தேர்தல்கள் நடைபெறும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஏலவே கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு கொள்கைகளில் நிதானம் தேவை



போதைப்பொருளை கட்டுப்படுத்துவது குறித்து அதிகமாக பேசப்படும் காலமிது. போதைப்பொருள் கட்டுப்பாடு குறித்துப் பேசுவது மிகவும் அவசியமானதுதான். அந்த அளவுக்கு அதன் தாக்கங்கள் எமது சமூகத்தைப் பாதித்திருக்கின்றன.

பல இளைஞர்கள் நாசமடைந்திருக்கிறார்கள். இங்கு, அங்கு என்று சொல்ல முடியாதபடி நாடு முழுவதும் மிகவும் மோசமாக இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. பல குடும்பங்கள் இதனால் சீர்குலைந்து போயுள்ளன. சமூகம் பலவீனமடைந்துள்ளது.

இன, மதம் என்ற வேறுபாடின்றி பலரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். போதை மருந்துக் கடத்தல்காரர்களிடையேயான போட்டி காரணமாக படு பயங்கரமான கொலைகள் கூட நடந்திருக்கின்றன. பயங்கரமான ஆயுதங்கள் அதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. மக்கள் ஒரு பாதுகாப்பற்ற ஒரு நிலையை உணரத் தொடங்கியுள்ளனர்.

பள்ளிக்கூட மாணவர்கள் கூட போதை மருந்துகளுக்கு அடிமையாகிப் போயுள்ளதாக தரவுகள் கூறுகின்றன.

இந்த நேரத்தில் போதை மருந்து கடத்துபவர்கள் தூக்கிலிடப்பட வேண்டும் என்ற கருத்தை பலரும் முன்வைத்துள்ளனர். இந்த விடயத்தில் கடுமையான முடிவுகளை நான் எடுப்பேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எச்சரித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது மிக மிக முக்கியமானது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டாலும்



அதற்காக அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் மக்கள் மத்தியிலும் சமூக அமைப்புக்கள் மத்தியிலும் காணப்படுகின்றன.

மனிதம் என்பதை முதன்மைப்படுத்தி பேசும் சமூகங்கள் மத்தியில் மரண தண்டனை நிறைவேற்றம் என்பது அதற்குப் புறம்பான ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. மேலைநாடுகள் பலவும் இதனை வலியுறுத்துகின்றன. தவறான தீர்ப்பால் ஒருவர் மரண தண்டனைக்கு இலக்காகிவிட்டால், அதனை மாற்றமுடியாமல் போய்விடும் என்பதே இதற்கான முக்கிய காரணம். அது மாத்திரமல்லாமல், "தண்டனைகள்" திருந்த வழி செய்ய வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டது அது.

**பிலிப்பைன்ஸ் அனுபவமும் ஜனாதிபதியும்**

இதற்கிடையே அண்மையில் பிலிப்பைன்ஸுக்கு சென்ற எமது ஜனாதிபதி இன்னுமொரு விடயத்தை உரத்துக் கூறிவந்தார். அதாவது இலங்கையில் போதைப் பொருளுக்கு எதிரான போரில் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதி றொட்றிகோ டுடெர்த்தே



அவர்களின் வழியை தான் பின்பற்றப் போவதாக பேசத்தொடங்கினார். இது அடுத்த அபாயத்துக்கான வழி என்பதை புரியாமலேயே ஜனாதிபதி இந்த விடயம் குறித்து மிக அதிகமாகப் பேசிவிட்டார்.

போதைப்பொருள் கடத்துவபவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களை கொன்றொழிப்பது என்பது பிலிப்பைன்ஸ் அதிபரின் கொள்கையின் அர்த்தமாகும். இதனை அவர் எந்தவிதமான குற்ற உணர்வும் இல்லாமல் செய்து வந்தார். 2016 இல் அவர் பதவிக்கு வந்தது முதல் இப்படியான சந்தேக நபர்கள் 12,000 பேர்வரை கொல்லப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அரசாங்க கணக்கு 4200 வரை செல்கிறது.

போதைப்பொருள் கடத்துபவர்கள் என்ற பெயரில் சிறிய போதைமருந்து பயன்படுத்துபவர்கள்கூட கொல்லப் பட்டார்கள். பலர் சிறிய குற்றங்களை செய்துவிட்டு சிறைகளில் தஞ்சமடைந்துவிட்டனர். ஊரெங்கும் உயிர்ப்பயம். இதுதான் பிலிப்பைன்ஸ் நடத்திய போதை மருந்துக்கு எதிரான போர். அந்தக் கொள்கையே மிகவும் ஆபத்தானது.

சீவகன் பூபாலரட்ணம்

இந்த விடயங்கள் புரிந்தோ என்னமோ, பின்னர் ஜனாதிபதி இது பற்றிப் பேசுவதை கொஞ்சம் குறைத்திருக்கிறார். ஆனால், இந்த போதை மருத்துக்கு எதிரான போர் குறித்து இலங்கை ஜனாதிபதி அண்மையில் கூறிய இரு விடயங்களும் கொஞ்சம் அச்சம் கொள்ள வைப்பவையாகவே இருக்கின்ற. ஒன்று மரண தண்டனையை நிறைவேற்றுதல். அடுத்தது பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியின் வழியை பின்பற்றுதல்.

இந்த இரண்டுமே ஆபத்தானவை. ஒரு நல்ல விளைவை ஏற்படுத்துவதற்காக மக்களை ஓரளவு அச்சம் கொள்ளும் அளவுக்கு மிரட்டுவது நடப்பதுதான். ஆனால், ஆபத்தான, மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையிலான இப்படியான விடயங்களை மிரட்டலாகக் கூட முன்வைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. முதலில் மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும்.


அதேவேளை போதை மருந்து கடத்தல் மற்றும் பாவனை போன்றவை பன்முகத்தன்மை வாய்ந்த ஒரு பிரச்சினை. அதன் ஆழ அகலங்கள் ஆராயப்பட்டு மனித உரிமைகள் மீறப்படாமல் அவற்றை கையாள வேண்டும். அதேபோன்று மரணதண்டனையை நிறைவேற்றுதல் போன்ற கனத்த விடயங்களில் கூட பலதரப்பு நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று இருந்துவிட முடியாது.

## அவதானியாரின் பார்வையில் பட்ட பழைய துண்டுப்பிரசுரம்




1970ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் காலஞ்சென்ற ராஜன் செல்வநாயகத்தின் ஆதரவாளர்களால் அச்சடித்து வெளியிடப்பட்ட தேர்தல் துண்டுப்பிரசுரம் ஒன்றை தங்களுக்கு தருகிறேன்.

இத் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்ட சகலரும் அமரர்களாகி விட்டார்கள். இவர்களில் K.கந்தசாமி என்பவரின் மகன் தற்போது மட்/மாநகர சபையின் அங்கதவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது எவரது மனதையும் நோகடிப்பதற்கானது அல்ல. அரசியலில் பழைய விடயங்கள் சற்று சுவாரசியமாக இருக்கும். அதற்காக மாத்திரம் தான் இது.



மரண அறிவித்தல்

"வீடு"

மற்றும்

"வீடு"

21-3-70 ...

முக்கிய குறிப்பு:-

இவ்வண்ணம்

S. ... M. ... J. G. ...
K. கந்தசாமி, T. ...

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அக்கட்சியின் பொதுச்சபையின் ஆலோசனைகளை அல்லது அக்கட்சியின் நாடாளுமன்ற குழுவிற்கு தெரியாமல் சர்வாதிகாரப் போக்கில் முடிவுகளை எடுத்து வருகிறார் என்ற குற்றச்சாட்டு இன்று நேற்றல்ல 2010ஆம் ஆண்டு தொடக்கம் முன்வைக்கப்பட்டு வருகிறது.

கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து எடுக்க வேண்டிய முக்கிய விடயங்களில்கூட அவர் தன்னிச்சையாக முடிவுகளை எடுத்து செயற்படுகிறார் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அண்மையில் வடக்கு கிழக்கு அபிவிருத்திச் செயலணிக்கு கிழக்கு இணைப்பாளராக குகதாஸன் என்பவரை நியமித்த விடயத்தை பலரும் செயலணிக்கூட்டத்தில் சமர்ப்பித்து அதன் பின் அதனை நடைமுறைப்படுத்தும் பிரதான பணி அவரை சார்ந்ததாகும்.

இப்பதவிக்கு இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த ஒருவரை நியமிப்பதே மிகப்பொருத்தமானதாகும். அந்த வகையில் வடமாகாணத்திற்கு இணைப்பு



தன்னிச்சையாக சுயநல போக்கில் இந்த நியமனத்தை அவர் செய்திருக்கிறார் என்றே பலரும் குற்றம் சாட்டுகின்றனர்.

வடக்கு இணைப்பாளராக சிறந்த ஆளுமையுள்ள இலங்கை நிர்வாக சேவை அதிகாரியை நியமித்த அதேவேளை கிழக்கிற்கு அவ்வாறான ஒருவரை ஏன் நியமிக்கவில்லை என்ற கேள்வி எழுவது இயல்பானதுதான். இது தொடர்பாக கிழக்கில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்களிடம் வினாவிய போது அது சம்பந்தன் ஐயாவின் தனிப்பட்ட முடிவு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என தமது இயலாமையை வெளிப்படுத்துகின்றனர்.

கிழக்கில் இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட தரத்தில் உள்ள பலர் உள்ளனர். அமைச்சு செயலாளர்கள், அரசாங்க

செய்து தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தார். சம்பந்தன் அவர்கள் சர்வாதிகாரப்போக்கில் தனக்கு வேண்டிய ஒருவருக்கு தேசிய பட்டியல் ஆசனத்தை வழங்கி விட்டார் என அப்போது பலரும் குற்றம் சாட்டியிருந்தனர்.

அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு தேசியப்பட்டியலில் இரு ஆசனங்கள் கிடைத்தன. அதில் வடக்கிற்கு ஒன்று கிழக்கிற்கு ஒன்று வழங்க வேண்டும் என பலரும் வலியுறுத்தியிருந்தனர். இதனடிப்படையில் வடக்கிற்கு வழங்கப்பட்ட தேசியப்பட்டியல் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட திருமதி சாந்திக்கு வழங்கப்பட்டது.

கிழக்கிற்கு வழங்கப்பட்ட தேசியப்பட்டியலுக்கு யாரை

# கிழக்கு அபிவிருத்திக்கு கிடைத்த வாய்ப்பை தவறவிடக் கூடாது

**இரா.துரைரத்தினம்**

சுட்டிக்காட்டுகிறார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரசிங்க தலைமையில் வடக்கு கிழக்கு அபிவிருத்தி செயலணி அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் முதலாவது கூட்டம் கடந்த வாரம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

அந்த செயலணியின் உறுப்பினர்களாக எட்டுப்பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வடமாகாணத்திலிருந்து மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், எஸ்.சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கிழக்கு மாகாணத்திலிருந்து இரா.சம்பந்தன், எஸ். யோகேஸ்வரன், கோடீஸ்வரன் ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்ட யோகேஸ்வரன் மாவட்டத்தின் கல்வி பொருளாதார அபிவிருத்திகளை இனங்கண்டு தகுந்த திட்டங்களை தயாரித்து வழங்குவாரா என்பது தொடர்பாக பலருக்கும் நியாயமான சந்தேகம் உண்டு. அறநெறி விடயங்கள் ஆலயங்களில் காட்டும் ஆர்வத்தை போல அவர் மாவட்டத்தின் கல்வி, பொருளாதார, சமூக அபிவிருத்திகளை இனங்கண்டு அதற்கான திட்டங்களை வரைந்து செயற்படுத்துவாரா என்பது சந்தேகமாகவே உள்ளது.

கல்வி நிர்வாகத்துறையில் நீண்ட அனுபவம் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் ஏன் இந்த செயலணியில் இணைத்துக்கொள்ளப்படவில்லை என்பது தெரியவில்லை. இதற்கான காரணத்தை இச்செயலணிக்கு பெயர் விபரங்களை சமர்ப்பித்த சம்பந்தன் அவர்கள் மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும்.

இந்த செயலணிக்கு வடமாகாண இணைப்பாளராக இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தரத்தை சேர்ந்த செல்வின் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். வடமாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு திட்டங்களை வரைந்து செயலாளராக நியமிக்கப்பட்ட செல்வின் மிகப்பொருத்தமானவராகும்.

செல்வின் மிக நெருக்கடியான 1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட உணவு கட்டுப்பாட்டு உதவி ஆணையாளராக பணியாற்றியவர். 1987ஆம் ஆண்டில் வாழைச்சேனையில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றை பார்வையிட்டு விட்டு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகள் சகிதம் மட்டக்களப்பு நகருக்கு திரும்பிக்கொண்டிருந்த போது விடுதலைப்புலிகளின் கண்ணிவெடி தாக்குதலில் படுகாயமடைந்து வலது கைவிரல்களை இழந்தவர். இக்கண்ணிவெடி தாக்குதலில் மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த எம். அந்தோனிமுத்து கொல்லப்பட்டார். இவர் மிக நேர்மையான சிறந்த நிர்வாகி என பெயர் பெற்ற ஒருவர்.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி செயலணியின் வடக்கு இணைப்பாளராக பொருத்தமான தகுதியான ஒருவர் நியமிக்கப்பட்ட சமகாலத்தில் கிழக்கில் நியமிக்கப்பட்ட இணைப்பாளர் அதற்கு பொருத்தமானவரா என்ற கேள்வி எழுகிறது.

கிழக்கு இணைப்பாளராக திருகோணமலையை சேர்ந்த குகதாஸன் நியமிக்கப்பட்டிருக்கிறார். மிக நீண்டகாலம் கனடாவில் வசித்து வந்த குகதாஸன் கடந்த வருடம் முதல் திருகோணமலையில் தங்கியுள்ளார்.

இவர் இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்தவர் அல்ல. இலங்கை நிர்வாகத்துறையிலோ அல்லது கல்வி பொருளாதார திட்டமிடல் துறையிலோ எந்த அனுபவமும் கொண்டவர் அல்ல. அவருக்கு இருந்த ஒரே தகுதி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களுக்கு நெருக்கமானவர் என்பது மட்டும் தான்.

இவரின் நியமனம் தொடர்பாக கிழக்கில் உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக்கட்சி உயர்மட்டங்களிடமோ சம்பந்தன் ஆலோசனை பெறவில்லை.

அதிபர்கள், மாகாண செயலாளர்கள் என பல மட்டங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் பலரும் கிழக்கில் உள்ளனர். அவ்வாறான ஒருவரை நியமிக்காது தனக்கு மிக நெருக்கமானவர் என்ற ஒரு காரணத்தை வைத்து பதவி ஒன்றை வழங்குவது கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் சில பதவிகளை சிலருக்கு வழங்கும் போது சர்வாதிகாரப்போக்கில் தனது சுயநலத்தை முன்நிறுத்தியே வழங்கி வந்திருக்கிறார் என்பதற்கு பல உதாரணங்களை சொல்லலாம்.

2001ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு நான்கு கட்சிகள் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டன. அப்போது தேசியப்பட்டியல் மூலம் ஒரு ஆசனம் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்தது.



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளராக இருந்த இரா.சம்பந்தன் அவர்கள் ஏனைய கட்சிகளையோ அல்லது தனது கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர்மட்டத்திடமோ சம்மதம் பெறாது தனக்கு மிக நெருக்கமான துரைரத்தினசிங்கம் அவர்களின் பெயரை தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பரிந்துரை

நியமிப்பதென கிழக்கில் யாருடனும் கலந்தாலோசிக்காது தனக்கு நெருக்கமான துரைரத்தினசிங்கம் அவர்களை மீண்டும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சம்பந்தன் அவர்கள் நியமித்தார்.

ஏற்கனவே ஒரு தடவை தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்ட துரைரத்தினசிங்கம் அவர்களுக்கு மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படுவது நியாயமா என தட்டிக்கேட்க கிழக்கில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்கள் யாருக்கும் துணிவு கிடையாது.

2013ஆம் ஆண்டு வடமாகாணசபை தேர்தல் அறிவிக்கப்பட்ட போது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த நான்கு கட்சிகளும் ஒரு முடிவை எடுக்க அதனை நிராகரித்து சர்வாதிகாரப்போக்கில் கொழும்பில் இருந்த முன்னாள் நீதிபதி விக்னேஸ்வரனை வடமாகாணத்திற்கு கொண்டு வந்தார். வடமாகாண முதலமைச்சராக்கப்பட்ட விக்னேஸ்வரன் வடமாகாண சபையை நாறடித்து சீரழித்தது மட்டுமல்ல தமிழ் மக்களை பிளவுபடுத்தும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக புதிய கட்சி ஒன்றையே ஆரம்பித்திருக்கிறார். விக்னேஸ்வரனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஊடாக அரசியலுக்கு கொண்டு வந்தது சம்பந்தன் அவர்களின் பிழையான முடிவு என்பதை இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள பலரும் உணர்ந்து கொண்டுள்ளனர்.

அதேபோன்று கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக குகதாஸனை நிறுத்தும் நோக்கத்தில் அவரை கட்சியின் சகல விடயங்களுக்கும் சம்பந்தன் அவர்கள் தற்போது முதன்மைப்படுத்தி வருகிறார்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் அடிக்கடி ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராசபக்சவை சந்தித்து வந்தார். தனியாக

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## மட்டு. மேற்கில் மூடுவிழா காணப்போகும் பாடசாலைகள்?



'அனுபவமே வாழ்க்கை, அவ்வாழ்க்கையின் பெரும்பகுதி பட்டறிவே. அவற்றுள்ளும் சிறுபகுதி படிப்பறிவு. உலகத்தினையே கைக்குள் அடக்கி என்ன நடைபெறுகின்றதென நொடியில் பார்க்கும், கேட்கும் நவீன காலத்தில் இருந்து கொண்டும், ஆரம்ப கல்வியினை பெற்றுக்கொள்ள முடியாமல், ஆசிரியர் இன்றி தவிக்கின்ற பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப்பிரதேசம் மாறியுள்ளமை வேதனையிலும், வேதனை தரும் விடயமே' என புளுகுணாவை குளத்துக்கட்டில் நின்று கொண்டு கனகசபையும் கதிர்காமத்தம்பியும் பேசிக்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படுவான்கரைப்பகுதி மக்கள், அடிப்படை வசதிகளைக் கூட இன்னமும் பெற்றுக்கொள்ளமுடியாமல் இருக்கின்றனர். இதற்காகத்தான் இன்றுவரை போராடிக்கொண்டிருக்கின்றனர். இவர்களது போராட்டங்களுக்கான தீர்வுகள் பலவருடங்களை கடந்தும் இன்னமும் கிடைத்தபாடில்லை. இந்நிலையில்தான் கல்வியைப் பெறுவதற்குக் கூட போராட வேண்டியவர்களாக அவர்கள் உள்ளனர். கடந்த வாரம் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் வெற்றிடம் தொடர்பில் கட்டுரை வெளியாகியிருந்தது. அக்கட்டுரையை தழுவியதாகவே கதிராமத்தம்பியினதும், கனகசபையினதும் பேச்சுக்களும் அமைந்திருந்தன.


ஆரம்பப்பிரிவிற்கான ஆசிரியர் வெற்றிடங்கள் இப்பிரதேசத்தில் 65க்கும் மேல் உள்ளன. ஆனாபோதிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பப்பிரிவிற்கான ஆசிரியர்கள் போதிய அளவுக்கு இருப்பதாக பேசிக்கொள்கின்றனர். அவ்வாறெனின் எங்கோ ஒரு வலயத்தில் ஆசிரியர்கள் மிதமிஞ்சி இருக்கின்றனர். அவ்வாறானவர்களை இப்பிரதேசத்திற்கு நியமிப்பதன் மூலமாக இப்பிரதேசத்து மாணவர்களின் கல்வி சீராக்கப்படும். அதற்கு மாறாக இன்றுவரை மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலிருந்து இடமாற்றம் பெற்று செல்கின்றனரே தவிர இப்பிரதேசத்திற்கு இடமாற்றம் பெற்று எவரும் வருவதாகத் தெரியவில்லை என்பதனை அறிக்கூடியதாகவிருப்பதாக கூறும் கனகசபை. ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பாடசாலைகள் சிலவற்றினை மூடவேண்டிய நிலையேற்பட்டிருப்பதாக கவலையுடன் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள கிராமமாக கச்சக்கொடிசுவாமிமலை கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கென ஆரம்பப்பிரிவு பாடசாலையொன்று கச்சக்கொடிசுவாமிமலையில் அமைந்துள்ளது. இப்பாடசாலையில் தரம் 1தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கு மூன்று ஆசிரியர்களும் ஒரு அதிபரும் கடமையாற்றியிருந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற இடமாற்றத்தின் மூலமாக இரு ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இதனால் தற்போது ஒரு ஆசிரியர், அதிபர் ஆகிய இருவருடன் மாத்திரமே இப்பாடசாலை இயங்கி வருகின்றது. ஒருநாளில் அதிபர் வலயத்தில் அல்லது கோட்டத்தில் நடைபெறும் கூட்டங்களுக்கோ, நிகழ்வுகளுக்கோ சமுகமளித்தால் அல்லது விடுமுறை எடுத்தால் அப்பாடசாலை ஒரு ஆசிரியருடன் மாத்திரமே இயங்கும். அதேநேரம் அதேநாளில் அவ்வாசிரியர் விடுமுறை எடுத்தால் பாடசாலையும் அன்றைய நாளில் விடுமுறை நாளாகும். இதன்காரணமாக கச்சக்கொடிசுவாமிமலை பாடசாலை அரசாங்கத்தால் வழங்கப்படும் விடுமுறை நாட்களைவிட இன்னும் பல விடுமுறைகளை பெற்றுக்கொள்ளப்போகின்றமையே உண்மையென வதங்கிய முகத்துடன் கனகசபை கதிராமத்தம்பியைப் பார்த்துக் கூறினான்.

இதுபோல மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையின் காரணமாக உள்ள சில பாடசாலைகளை மூடவேண்டிய துர்ப்பாக்கியத்துடன் இருப்பதாக கனகசபையிடம், கதிராமதம்பியும் கூறினான். குளுவினமடு விநாயகர் வித்தியாலயம், மரப்பாலம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, வெலிக்காகண்டி விபுலானந்தா வித்தியாலயம், பாலர்சேனை கலாசூரி விநாயகமூர்த்தி வித்தியாலயம், தளவாய் சுவாமி அஜராத்மானந்தாஜீ வித்தியாலயம், கரவெட்டியாறு விஜித்தா வித்தியாலயம், இருநூறுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை போன்ற பாடசாலைகள் ஒரு அல்லது இரு ஆசிரியர்களுடன் மாத்திரமே இயங்கி வருகின்றன. இந்நிலை இப்பாடசாலைகள் மூடுவிழாவினை சந்திப்பதற்கான அறிகுறிகளே. இவ்வாறு

**படுவான் பாலகன்**

இப்பாடசாலைகள் மூடப்பட்டால் பல மாணவர்கள் கல்வியினை இழப்பர் என்பதே யாதார்த்தம் எனக்கூறிய கனகசபை, இடமாற்றங்கள் செய்து ஆசிரியர்களை பெற்றுக்கொள்வது கடினமாக எண்ணினால், மாவட்டத்தில் எத்தனையோ பட்டதாரிகள் வேலையின்றி, ஆசிரியர் போட்டிப்பரீட்சையிலும் சித்தியடைந்து மனவிரக்தியுடன் வீடுகளில் முடங்கியிருக்கின்றனர். இவர்களுக்கு நியமனங்களை வழங்கி இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய முடியும். இதற்கான நடவடிக்கைகளாவது செய்து மட்டக்களப்பு மேற்கு மாணவர்களின் கல்விக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரம்சேர்க்க வேண்டும் எனக்கூறிய கனகசபை குளக்கட்டில் இருந்து இறங்கி துவிச்சக்கரவண்டியில் தனது பயணத்தினை கிழக்கு நோக்கி ஆரம்பித்தான்.



விம்பம் – லண்டன் நடாத்தும் ஓவியப் பரிசுப் போட்டியும் கண்காட்சியும்
இலங்கைத் தமிழர்களின் ஓவியக்கலை மரபில் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியவரும்
நவீன ஓவியக்கலையின் முன்னோடியுமான
ஓவியர் அ. மாற்கு ஞாபகார்த்த
ஓவியப் பரிசுப் போட்டியும் கண்காட்சியும்

போட்டி நிபந்தனைகள்:
1. இலங்கையில் வசிக்கும் 6 -15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான போட்டி.
2. 21.0 cm X 29.7 cm அல்லது 29.7 cm X 42.0 cm அளவிலான காகிதம் அல்லது அட்டையில் எந்தவகையான ஊடகங்களையும் பாவித்து வரையலாம்.
3. A. எங்கள் வாழ்வு (Our Life), அல்லது B. எனது கனவு (My Dream) ஆகிய பொருள்பட ஓவியங்கள் வரையப்படவேண்டும்.
4. ஒருவர் ஒன்று அல்லது இரண்டு படைப்புகளையும் அனுப்பிவைக்கலாம்.
5. ஓவியத்தின் பின்புறத்தில் படைப்பாளியின் ஒளிப்படம் ஒட்டப்பட்டு, பாடசாலை அதிபர் அல்லது கிராம சேவகரால் படைப்பாளியின் பெயர், வயது ஆகியன உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
6. விண்ணப்பங்கள் 30. 04. 2019 திகதிக்கு முன்பாக கீழ்க்காணும் ஏதாவதொரு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் அல்லது கையளிக்கப்படவேண்டும்.
7. அனுப்பப்படும் தபால் உறைகளின் மேல் இடது மூலையில் *VIMBAM Art Competition* என்று குறிப்பிட மறக்கவேண்டாம்.
8. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

வெற்றிபெறும் போட்டியாளருக்கு அவரவர் திறமைகளுக்கேற்ப
Rs. 2,00,000
ரூ.20,000, ரூ.15,000, ரூ.10,000, ரூ.5,000 என
18 பரிசில்கள் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம்: Noolaham Foundation, 185, Aadiyapatham Road, Kokkuvil, Jaffna - Tel:0773 747 828
மட்டக்களப்பு: P. Seevagan, Arangam Office, 227, Bar Road, Batticaloa - Tel: 0713 999 091
கிளிநொச்சி: S. Karunakaran, 754, Kanagarasa Thirunagar North, Kilinochchi - TeL: 0770 871 681
வத்தளை: Pramila Pradeepan, 142/17, Don Bosco Mawatha, Palliyawatha, Wattala - Tel: 0771 320 760
பதுளை: K. Thirulogashankar, Principal, Bd/Saraswathy National College, Mahiyangana Road, Badulla - Tel: 0716 997 644
மாத்தறை: Chandani Samarawickrama, Sipsara Education Center, 33, Issadeen Town, Matara - Tel: 0715 784 673

பரிசுபெற்ற ஓவியங்கள், செப்ரெம்பர் 2019இல் இலங்கையில் நடைபெறவிருக்கும் ஓவியக் கண்காட்சிகளில் இடம்பெறும்

ஊடக அனுசரணை: தாய்வீடு அரங்கம்

VIMBAM: an organization for the promotion of art, literature, film and culture



# மூதாதையரின் காலடிகள்

# ஆலங்கேணி



'உப்பு நீர்ச் சிற்றாறு ஊரும்-தென்றல்
ஓடி வந்து மரச்செடியில் சாரும்
செப்பலியும் மீனினமும் கூடும்-ஊரி
சேர்ந்து ஊத சில் வண்டு பாடும்'
இது ஆலங்கேணி பற்றி கேணிப் பித்தனின் அழகிய பாடல் வரிகள்.

ஆலங்கேணி உப்பு நீர் சிற்றாறுகள் ஊரைச் சூழ்ந்து ஓட அதனிடையே சம தூரத்தில் இரண்டு பெரும் ஆல மரங்கள் நிற்க அதன் நடுவே அழகிய கேணி, அதனால் ஆலங்கேணி என பெயர் வந்ததாக கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டிருக்கும் ஆலங்கேணி கிராமம் குளக்கோட்டு மன்னன் காலத்துக்கு முனரான வரலாற்றுப் பழமை மிக்கது. கோணேசர் கல்வெட்டு குறிப்புகளின்படி ஆலங்கேணி தம்பலகாமப் பற்றோடு இணைந்த அரசாட்சி பிரதேசமாக இருந்தமையும் கோணேசர் கல்வெட்டு வளமைகளுக்கு ஏற்ப குடி முறைகளையும் கோயில் தொழும்பு முறைகளிலும் புராதன தொடர்புகள் நிறைந்த பழந் தமிழ் கிராமமாக ஆலங்கேணி அமைந்துள்ளது.

ஈழத்தின் தொன்மையான வழிபாட்டு முறையான கண்ணகி வழிபாடு இப் பிரதேசத்தில் பண்டைய நாள் தொட்டு இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.



ஆலங்கேணியில் புராதனமான அம்மன் கோயில் இப்போதிருக்கும் இடத்திற்கு முன் உள்ள பூமிக்குள் புதையுண்டு கிடப்பதாக நம்பப் படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன் அந்த இடத்தில் இருந்த கற்களை தங்கள் தேவைகளுக்கு பயன்படுத்தியிருக்கின்றனர்.

பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

அவை கோயிலின் அழிபாடுகள் என உணரவில்லை. சில வருடங்களுக்கு முன் அவ்விடத்தில் கிணறு வெட்டியபோது கல்லில் எழுத்துக்களுடனான பகுதி கிடைத்திருக்கிறது. ஆனால், அவை இப்போ அழிந்து போயுள்ளன அன்னியப் படையெடுப்புக் காலகட்டத்தில் இங்கிருந்த புராதன கோயில் அழிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை மட்டும் இப்போது உணர முடிகிறது.

இங்கு பூசாரிமார் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தமையும் அரசர்கள் அவர்களுக்கு நிவந்தமாக காணிகள் வழங்கியமைக்கு சாட்சியாக பூசாரி வெட்டை வயல்வெளி காணப்படுகிறது. இது போலவே அடப்பனார் வெட்டை வயல்வெளி அடப்பனார் முறை இங்கிருந்தமைக்கான சான்றாய் நிலைத்து பெயர் சொல்கிறது.

ஆலங்கேணியை சூழவுள்ள பல இடங்கள் சோழர் காலத்தில் செழிப்பும் வனப்பும் மிக்க பேரரசின் செல்வாக்கில் கோயில்களும் அதனோடிணைந்த தொல் நகராய் இருந்தமைக்கான சான்றுகள் இங்கு கட்டிட இடிபாடுகளாய் கொட்டிக் கிடக்கின்றன.

தாமரவில், மாகாமம், சுங்கான் குழி, தீனேரி, பாண்டியனூற்று கற்சுனை, சாவாறு, சாந்தாப்பணிக்கன், கீரைத் தீவு, பெட்டைக் குளம், வைரா வெளி, கண்டல் காடு ஆகிய இடங்கள் தொன்மையான நாகரிக அழிபாடுகளின் சொர்க்கமாய் நம் ஈழத் தமிழர் வரலாற்றின் சான்றாய் உள்ளமை இங்கு மனம் கொள்ளத் தக்கது. பாண்டியனூற்று எனும் இடத்தில் பெரியதொரு சிவன் கோயில் இருந்து அழிந்து போய் உள்ளது இன்றும் பலர் அந்த இடம் போய் பொங்கல் வைத்து வழிபடும் முறையை கொண்டுள்ளனர்.




மாகாமம் எனும் குளக்கட்டில் மூர்க்க மாதா அம்மன் கோயில் இருந்ததாகவும் அங்கு வருடம் தோறும் பெரும் வேள்வி நடை பெற்றதாகவும் கொட்டியாரம் தம்பலகாமம் என சுற்றுப்புற தமிழர் வாழ் நிலங்களிலிருந்து மக்கள் கூடி வேள்வி செய்ததாகவும் முன்னவர்களின் அனுபவ மொழிகள் கூறுகின்றன.

இங்கு தமிழரின் பாரம்பரியமான திண்ணைப் பள்ளிக் கூடம் இயங்கியமையும் அதுவே பின்னாளில் 1896ஆம் ஆண்டு ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையாக மாறியதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

ஆலங்கேணி ஈழத் தமிழர்களின் வரலாற்றுப் பழமை மிக்க கிராமம்

# நாட்டுக்கு அதிக வருமானம் பெற்றுத்தந்தும் உரிய ஊதியமின்றித் தவிக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்



பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் தற்போது சுமார் பதினைந்து லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 18 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது, தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் சுகாதாரத் தொழிலாளர்களாக பணியாற்றுவதற்காக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டனர்.

2016 ல், தொ ழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 80 0 ரூபாய் தேவை என்று தொழிலாள ர்கள் கோரினர். 2016 அக்டோபர் 15 ஆம் திகதி கையெழுத்திட்ட கூட்டு உடன்படிக்கையின்படி, தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை ஊதியம் ரூ. 500. ஒரு நாள் வேலை, வருகை ஊக்கத்தொகை ரூ. 60. மற்றும் விலையுயர்வு சப்ளிமெண்ட் (தேயிலை மற்றும் ரப்பரின் விலையை பொறுத்து), ரூ .30. உற்பத்தி ஊக்கத்தொகை ரூ. 140. ஒரு தொழிலாளி மொத்த வருவாய் ரூ. 730. இதனடிப்படையில் கூட்டு ஒப்பந்தம் ஒரு தொழிலாளி ரூ 730 மொத்த ஊதியம் பெறுவார் என்று கூறுகிறது. ஆகவே மாதத்தின் வேலைநாட்கள் 75% மட்டுமே. வேலைநாட்கள் 75% என்று பார்க்கும் போது மாத சம்பளம் ரூ. 15.330 ஆக உள்ளது. மாதாந்த செலவினங்களை நிர்வகிக்கக் கூட போதாது என்பதை இது காட்டுகிறது.

அரசாங்கம் மற்றும் பிற துறைகளில் ஒரு

எஸ். டி. நளினி

சாதாரண தொழிலாளிக்கு தினசரி ஊதியம் சுமார் ரூ. 800. ரூ1000. உதாரணமாக, கட்டுமானத் தளத்தில் வேலை செய்யும் தொழிலாளி குறைந்தபட்சம் ரூ. 1200 பெறுகின்றார் மற்றும் தனியார் துறைகளில் பெரும்பாலானவை ரூ. 1200 முதல் ரூ 1500 என ஊதியம் பெறுகின்றனர்.

தோட்டத்துறை சமூகம் பல அம்சங்களில் பின்தங்கிய சமூகமாகும். உதாரணமாக, கிட்டத்தட்ட 8.8 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர், ஆனால் இந்த மக்களால்தான் இவர்களின் வியர்வையை இரத்தம் ஆக்குவதால் இலங்கைக்கு கிடைக்கும் அந்நியசெலாவணி தேயிலை உற்பத்தியால் 14% , ரப்பர் 8% , ஆகா மொத்தத்தில் 22% அன்னியச் செலாவணி எம் உறவுகளான இம்மக்களால் நம் நாட்டின் பொருளாதரத்தில் கிட்டதட்ட 5 இல் 1 பங்காக உள்ளது என்பதை வடகிழக்கு மக்கள் உணர வேண்டும். அவர்களுக்காக நாம் குரல் கொடுத்து கீழே சொல்லபட்ட விடயங்களை அரசு உறுதி செய்யும் வரை சேர்ந்து போராட வேண்டும்.



அரசாங்கம் மற்றும் தோட்டத் தொழில்கள் / பெருநிறுவன நிறுவனங்கள் தோட்டத் தொழிலாளர்கள் பிற தனியார் துறைகளில நாளந்த ஊதியம் ரூ 1000 வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

· தோட்டத் தொழிலாளர்களின் ஊதியப் பிரச்சினையில் அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும். (எவர் ஆட்சியில் இருகின்றார் என்பது முக்கியம் இல்லை )

தோட்டத்துறை மக்களின் வறுமை ஒழிக்கப்படவேண்டும், போசாக்கின்மை தீரவேண்டும், கௌரவமான வேலை, லயத்தில் வாழாமல் கௌரவமாக வாழக்கூடிய வீடுகள் , உட்கட்டமைப்பு வசதிகள் வைத்தியசாலைகள் மற்றும் சமூக நலன்புரி வசதிகள் பெண்கள் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை பாதுகாத்தல் போன்றவற்றை உறுத்திபடுத்த வேண்டும்.

# போருக்குப் பின்னரான இலங்கையின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் தமிழர் பங்களிப்பு - மாநாடு



இந்த மாநாடு நடந்தது, மட்டக்களப்பு நகரில் இருந்து சுமார் 20 கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள ஒரு சிறிய பிந்தங்கிய கிராமத்தில். பெயர் புலையவெளி. லண்டனில் இருக்கின்ற தமிழர்களின் ஆலயமான ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும் மூன்று கிராமங்களில் இதுவும் ஒன்று.

இதுவரையில் பெரிதாகப் பேசப்படாத ஒரு தொனிப்பொருளிலான ஒரு மாநாடு இது. " போருக்குப் பின்னரான இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் பங்களிப்பு" என்ற விடயம் இங்கு கலந்தாராயப்பட்டது.

ஈழபதீஸ்வரர் ஆலயமும் பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களின் அமைப்பும் இணைந்து இணைந்து இதனை ஏற்பாடு செய்தன. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் உதயகுமார், மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன், மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் ஆகியோருடன் பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும் ஆய்வாளர்கள் கல்விமான்கள் இதில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் புலம்பெயர் தமிழர் எதிர்நோக்கும் சிரமங்கள், இந்து மத நிறுவனங்களின் பலவீனம் போன்ற விடயங்கள் குறித்து விபரித்துப் பேசிய லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாக சபையின் தலைவரும், பிரித்தானியா வாழ் புலம்பெயர் இலங்கைத் தமிழர் அமைப்பின் செயலாளருமான ராஜசிங்கம் ஜெயதேவன், இலங்கையில் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரிகள் மத்தியில் காணப்படும் பொதுமக்களுக்கு உதவுவதற்கான ஆர்வங்கள் குறித்தும் விபரித்தார்.

இலங்கை மக்கள் தொடர்பான புலம்பெயர் மக்களின் அக்கறையை வரவேற்றுப் பேசிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் உதயகுமார், இலங்கையில் உள்ள அரசாங்க கட்டமைப்பை புரிந்துகொண்டு பலம்பெயர் அமைப்புக்கள் செயற்பட்டால், அணுகுதல் இலகுவாக இருக்கும் என்றார்.

அத்துடன் பயன்பெறுவோரை தேர்வு செய்வதை அரச நிறுவனங்களின் ஊடாக செய்வதன் மூலம் ஒருவருக்கு பல உதவிகள் கிடைக்க, சிலர் ஏதும் கிடைக்காமல் இருக்கும் நிலைமையை தவிர்க்க முடியும் என்றார் உதயகுமார்.

அதேவேளை, போர்க்காலத்திலும், இயற்கை அனர்த்த காலங்களிலும் போருக்குப் பின்னரும் புலம் பெயர் அமைப்புக்களின் உதவியை வெகுவாகப் பாராட்டினார் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன். அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது உதவிகளின்போது நிர்வாகச் செலவாக அதிகம் செலவு செய்வது குறித்து குறைபட்ட அவர், ஆனாலும் புலம் பெயர் அமைப்புக்களில் அப்படியான நிலைமை குறைவு என்று கூறி அதனை வரவேற்றார்.

வடபகுதி மக்களால் நிர்வகிக்கப்படும் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயம், கிழக்கு மண்ணில் உள்ள கிராமங்களுக்கு உதவ வந்ததை மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வேறு பல தேவைகள் குறித்தும் அவர் அங்கு விபரித்துப் பேசினார்.



இலங்கையில் போருக்குப் பின்னரான அபிவிருத்தியில் உதவவரும் சில புலம்பெயர் அமைப்புக்கள், அதற்காக இலங்கை அரச நிறுவனங்களை தொடர்புகொள்ள தயக்கம் காட்டுகின்றன. ஆனால், அவர்கள் செய்யும் பணிகள் நீடித்த பயனைத்தரவேண்டுமானால், அதற்கு அரச நிறுவனங்களின் தொடர்பு அவசியம் என்ற கருத்தை கிழக்கு மாகாண முன்னாள் துணைச் செயலாளர்களில் ஒருவரான பாஸ்கரதாஸ் அவர்கள் வலியுறுத்தினார்.

**லியோண்**

புலம்பெயர் தமிழர்கள் உதவ வரும் போது அரசாங்க நிறுவனங்களை அணுகி முறைப்படி அதனைச் செய்ய வேண்டும் என்பதை விரிவுரையாளர் பாரதி கெனடியும் வலியுறுத்துகிறார். உதவி பெறும் மக்களின் மனப்போக்கு இந்த விடயங்களில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் அவர் விபரித்தார்.

உதவி பெறுபவர்களின் மனப்பாங்கில் பெரும் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறையின் தலைவர் பேராசிரியர் தில்லைநாதனும் வலியுறுத்தினார்.

போருக்குப் பின்னரான இலங்கையில் எமது மக்களின் தேவைகளில் பொருளாதாரமும், கல்வியும் முக்கியமானவை என்று விளக்குகிறார் மூத்த விரிவுரையாளர் சிவரட்ணம்.

கிராமங்களை அல்லது மக்களை அணுகும் புலம்பெயர் அமைப்புக்கள் அவர்களின் தேவைகளை சரியாக புரிந்து உதவவேண்டுமே ஒழிய, தம்மிடம் உள்ளதை அவர்கள் மீது திணிக்கக்கூடாது என்கிறார் ஓய்வுபெற்ற ஒரு கிராம அதிகாரி முத்துலிங்கம்.

உரிய கட்டமைப்புகளின் ஊடாக புலம்பெயர் அமைப்புக்களின் நிதி இங்கு முதலீடு செய்யப்பட வேண்டும் என்று கூறிய சமூகச் செயற்பாட்டாளரான மைக்கல் மதி, கல்வி, காணி போன்ற விடயங்களிலும் முதலீடு தேவை என்கிறார்.

போரினால் காயமடைந்து பகுதியாகவோ, முழுமையாகவோ செயற்படும் நிலையை இழந்த மாற்றுத்திறனாளிகள் இங்கு அதிகமாக காணப்படுகின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரை இலங்கையில் உள்ள ஒரு உரிய கட்டமைப்புக்குள்ளால் தமக்கு வழங்கப்படும் உதவி முழுமையான பலனைத்தரும் என்கிறார்கள்.

வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் மற்றும் தொழிற்திறன் பகிர்வு போன்ற விடயங்களில் புலம்பெயர் தமிழர் இலங்கை வாழ் மக்களுக்கு உதவ வேண்டும் என்கின்றார்



கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கே. சுரேஷ்.

அதேவேளை புலம்பெயர் தமிழர் வழங்கும் சில உதவிகளின் பலாபலன் குறைவாகக் காணப்பட்ட சம்பவங்களையும் அவர் குறிப்பிடாமல் இல்லை.

எது எப்படி இருந்த போதிலும், இங்குள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை புலம்பெயர் தமிழர் சரியாகப் புரிந்துகொண்டு செயற்பட்டால், நல்ல பலன் கிடைக்கும் என்று பேராசிரியர் தில்லைநாதன் வலியுறுத்துகிறார்.

இவ்வகையில் பலவிதமான கருத்துக்கள் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன. மாநாட்டில் நன்றியுரையை புலயவெளி கிராமத்தைச் சேர்ந்த அனோஜன் வழங்கினார். இது ஒரு முதற்கட்ட மாநாடுதான். இந்த விடயம் இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் மிகவும் விரிவாக ஆராயப்பட வேண்டும். தொடர்ச்சியான ஆய்வுகள் இந்த விடயத்தில் தேவைப்படுகின்றன.

புலம் பெயர் தமிழர்களின் உதவுவதற்கான ஆர்வத்தில் எவரும் குறைகூறவில்லை. அதனைப் பாராட்டுகிறார்கள். ஆனால், உதவி தேவைப்படுவார் யார் என்பதிலும், அடிப்படைத் தேவை என்ன என்பதிலும்தான் நிறைய கவனம் தேவை என்று எல்லோரும் வலியுறுத்துகிறார்கள். அதுமாத்திரமன்றி இலங்கையை பொறுத்தவரை இலங்கையின் மாவட்ட, மாகாண அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செய்யும் உதவிகள் செயற்திறன் உள்ளவையாக இருக்கும் என்றும் பலர் வலியுறுத்துகிறார்கள்.




HOTEL
NIRUTHA
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444 Fax:+94652054092
UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelnirutha.com
Hotline:
+94 779 990 910
NIRUTHA


NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY
Are you 18+ and have GCSEs or work experience?
Do you have A levels but missed your place at university?
Foundation Degree Business (London Metropolitan University)
Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
HND Business (Pearson)
HND Hospitality Management (Pearson)
BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)
Student Finance Available
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

# மட்டு மாநகரசபை

## உள்ளூராட்சி மன்றங்களும் அதன் வரவு செலவுத் திட்டமும்

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்




உள்ளூராட்சி மன்றம் என்பது தனக்குரிய அதிகார எல்லைப்பிரதேசத்தில் வாழும் மக்களிடமிருந்து வரிகள், வாடகைகள், கட்டணங்கள், தண்டங்கள் என்பவற்றினூடாகவும் வேறு வருமானங்களை ஈட்டுவதன்மூலமாகவும் மக்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கடமைப் பொறுப்புடைய தனித்துவமான ஒரு சிறிய ஆட்சி முறையாகும்.

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பல போராட்டங்களுக்கு மத்தியில் நடைபெற்று, ஒவ்வொரு



உள்ளூராட்சி மன்றங்களுக்குமான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு முதலாவது ஆண்டு நெருங்கும் நிலையில் கடந்த டிசம்பர் மாதம் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமக்குரிய 2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை தயாரித்து அதனை நிறைவேற்றியும் கொண்டன. சில உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டு தடவைகள் தோல்வியடைந்தபோதும் அதனை சட்டத்தின் ஏற்பாடுகளால் ஏற்றுக்கொண்டுள்ளன.


இந்த வரவு செலவுத் திட்டம் மக்களோடு இணைந்து தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களது தேவைகளை நிறைவேற்றத்தக்க வகையில் வெளிப்படைத் தன்மையோடு தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வரவு செலவுத் திட்டத்தின்படியே எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் 2019ம் ஆண்டுக்கா தமது செலவீனம் மற்றும் அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இங்கே கடந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கும் இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கும் இடையிலான வேறுபாடு மக்களால் அறியப்பட வேண்டும். இது வரி செலுத்தும் மக்களின் கடமையாகும். கடந்த ஆண்டைவிட இவ்வருட வரவு செலவுத்திட்டம் குறிப்பாக எத்தனை வீதத்தினால் வருமான அதிகரிப்பைக் கொண்டதாக அமைந்திருக்கின்றது என்பது கவனிக்கப்படவேண்டிய விடயமாகும். அது மாத்திரமன்றி அந்த வரவு செலவுத்திட்டத்தில் காட்டப்படுகின்ற வருமானத்தில் குறைந்தது 30 வீதமாவது அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக செலவு செய்யப்பட வேண்டுமென உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கை கூறுகின்றது. ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் தமது வரவு செலவு திட்டத்தின்படி வருமானம் ஈட்ட வேண்டும். அந்த வருமானம் முழுமையாக அறவிடப்படும்பட்சத்தில்தான் தனது பிரதேச மக்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சுயமாக முன்னெடுக்க முடியும். ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்திலும் செலவுகள் மேற்கொள்ளப்படும்போது அவை நியாயமான செலவுகளா என்பதை மக்கள் கவனிக்கவேண்டும். ஏனெனில் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான திட்டங்கள் உள்வாங்கப்பட்டிருப்பது அவசியமாகும்.

சில உள்ளூராட்சி மன்றங்களில் வரவு-செலவுத்திட்ட நிதியில் பெரும்பகுதி நிர்வாக செலவுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இது அந்த உள்ளூராட்சி மன்றத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளைப் பலவீனப்படுத்தும்.

அத்துடன் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் திட்டமிட்ட நிதியை முழுமையாக அறவிடவேண்டும். நிலுவைகள் இருக்குமாயின் திட்டமிட்டபடி பணிகளை முழுமையாக செய்ய முடியாது. நிலுவைகளை அறவிடும் உபாயங்களை காலத்துக்காலம் கண்டறிய வேண்டும். ஒவ்வொரு காலாண்டிலும் நிலுவைகள் அடையாளப்படுத்தப்பட்டு அந்த நிலுவைகளை அறவிட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அனேகமான உள்ளூராட்சி மன்றங்களில் குடியிருப்பு நிலங்களுக்கான சோலைவரி அறவிடப்படுவதில்லை. இதனால் பாரிய வருமான இழப்பு ஏற்படுகின்றது. எனவே ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் தற்போது இருக்கின்ற உறுப்பினர்கள் தமக்குள் காணப்படுகின்ற கட்சி வேறுபாடுகளை மறந்து தமது பிரதேச அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் தமது பிரதேசத்திற்கான குடியிருப்புகளின் பெறுமதியை கணிப்பிட்டு அதன் வீத அடிப்படையில் சோலைவரி அறவிட ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு காலம் எடுக்கும், ஆயினும் அப்பொழுதுதான் நிலையான வருமானத்தை ஈட்ட முடியும், அந்த வருமானத்தில் இருந்து மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும்.

## மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவனின் நன்றியும் எச்சரிக்கையும்



மட்டக்களப்பு மாநகர சபையும், மட்டக்களப்பு வர்த்தகசங்கமும் சேர்ந்து எடுத்த தீர்மானத்துக்கமைய பண்டிகை நாட்களையொட்டி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் தங்களது வியாபார நவடிக்கைகளை நடத்தி மக்களுக்கு சிறந்த சேவையை செய்தமைக்கும் தொடர்ந்து வந்த ஞாயிற்றுகிழமைகளில் வியாபார நிறுவனங்களை மூடியமைக்கும் மாநகர முதல்வர் தி. சரவணபவன் மனமார்ந்த நன்றியை தெரிவித்திருக்கிறார்.

அதோ போல எதிர்வரும் காலங்களிலும் சாப்புச்சட்டத்துக்கமைய ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டதோடு,

தனியார்கல்வி நிலையங்களையும், கல்விச்செயல்பாடுகளையும் மாநகரசபையில் பதிவுசெய்து தொடர்ந்து கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாநகரசபை சார்பில் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும் பல நிறுவனங்கள் பதியப்பவில்லை என்றும் மாநகரசபை நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**லியோண்**


எனவே தங்களது நிறுவனங்களை பதிவுசெய்து, மாநகரசபை நிபந்தனைகளுக்கமைய நடத்தவேண்டும் என்றும் அதை மீறும் பட்சத்தில் மீறும் நிறுவனங்கள் மீது சட்டநவடிக்கை எடுக்கப்படும் என்றும் மனவருத்தத்துடன் அறிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எமது பிள்ளைகளின் நலனுக்காக ஒரு அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்

## இதுவும் ஒரு நல்ல ஐடியா

### டிஜிட்டல் அறிவித்தல் பலகை



மட்டுநகரில் முக்கிய இடங்களில் டிஜிட்டல் அறிவித்தல் பலகையை மட்டு மாநகர சபை நிறுவலாமே. அதில் போக்குவரத்து நேர அட்டவணை, முக்கிய அறித்தல்கள் , காலநிலை அறிவித்தல்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் மக்களுக்கு எச்சரிக்கையையும் அறிவுறுத்தல்களையும் வழங்கலாமே.




மேலும் விளம்பரங்கள் மூலம் வருமானத்தையும் மாநகரசபை ஈட்டிக்கொள்ளலாம். Smart City என்னும் தொனிப்பொருளில் இதுவும் ஒரு படி.


**லியோண்**

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# எம்.ஐ.எம்.சாக்கீரின் ''சம்மாந்துறை இடப்பெயர் வரலாறு''

பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றெழுத்துகளில் மூன்று விதமான குறைபாடுகள் இருப்பதுண்டு. ஒன்று, அது கருத்துவாதி ஒருவரால் குறுகிய வட்டத்துக்குள் அடைக்கப்படுவது. வரலாற்றாளர் தனது இனம் சார்ந்ததாக அல்லது மொழி சார்ந்ததாக, அல்லது மதம் சார்ந்ததாக, சில முன்முடிவுகளை எடுத்துக்கொண்டு, அதை நிரூபிப்பதற்காக வரலாற்றைக் குறுக்குவது, திரிப்பது முதலான நடவடிக்கைகளில் ஈடுபடுவது இந்த வகை. இப்படிச் சொல்வதை, மதம், இனம், மொழி சார்ந்த எல்லா வரலாறுகளுமே குறைபாடானவை என்று சொல்வதாகக் கொள்ளக்கூடாது. அத்தகைய வரலாறுகளை எழுதும் ஆசிரியர்கள் சில இடங்களில் என்றாலும், நடுநிலைப் பார்வையைக் கொண்டிருக்க முயல்வதில்லை என்பது தான் இப்படிச் சொல்வதன் சரியான பொருள்.

இரண்டாவது குறைபாடு தொன்ம வரலாறு. தொன்மங்கள் (அதாவது ஐதீகங்கள், நம்பிக்கைகள், செவிவழிக் கதைகள்) எல்லாப் பண்பாடுகளிலுமே தவிர்க்க முடியாத இடம் வகிப்பவை. ஆனால், தொன்மங்களை அப்படியே நடந்தவை என்று நம்புவதும், அவை மறுக்கமுடியாத வரலாற்றுச் சம்பவங்கள் என்று கொள்வதும் வரலாற்றுக்கு இழைக்கப்படும் அநீதி. தொன்மத்தில் கூறப்படும் வரலாறு என்ன என்பது நன்கு பகுப்பாயப்பட்ட பின்னரே, அதை வரலாறாக ஏற்கவேண்டும். ஆனால், யாதொரு சரித்திர முக்கியத்துவமும் இல்லாத தொன்மங்களை வரலாறு என்று நிரூபிக்க முனைவதிலேயே நம்மில் பலர் பெருமளவு காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக, சீதையை இழந்து விட்டதால் வெகுண்ட இராமர் கடலைச் சுட்டிக்காட்டி 'அந்த மான் நிக்கோ பார்' என்று கேட்டாராம், அதனால் தான் அந்தத் தீவுகளுக்கு அந்தப்பெயர் வந்ததாம் என்பது சுவையான ஒரு தொன்மம். இந்தக் கட்டுரையாளனின் பிறந்தகமான அம்பாறை மாவட்டம் தம்பிலுவில் கிராமத்துக்கும் இப்படி ஒரு தொன்மம் கூறப்படுவதுண்டு. அதாவது இராம இலட்சுமணர்களை




வெல்வதற்காக நிகும்பலை யாகம் செய்ய முயன்ற இராவணன் மகன் இந்திரசித்து, இங்கிருந்த சிவன் கோவிலில் அடைக்கலம் புகுந்ததாகவும், இராமர் இலட்சுமணரைப் பார்த்து 'தம்பி, இழு வில்லை' என்று சொல்லியதை அடுத்து இலட்சுமணன் அம்பால் இந்திரசித்து கொல்லப்பட்டதாகவும், எனவே தான் இந்த ஊர் 'தம்பிஇழுவில்' என்றானது என்றும் ஒரு கதையை சொல்லுவார்கள்.

இந்த இரு தொன்மங்களுமே வேடிக்கைத் தன்மை வாய்ந்தவை, கேட்கவும் இரசிக்கவும் அருமையானவை. ஆனால், இந்த இரு கதைகளையும் வரலாற்று ஆதாரமாகக் கொள்ளமுடியுமா? வெறும் தொன்மங்களை ஆதாரமாக வைத்து மேற்குறிப்பிட்டு தீவுகளும், ஊரும் இராமாயணத்தோடு தொடர்புடையவை என்று சொல்லமுடியுமா? எத்தனை பெரிய அபத்தம் அது?

மூன்றாவது குறைபாடு, காலவரிசை தொடர்பானது. நடந்து முடிந்த விடயமொன்று, இரு வேறு மூலங்களில் இருவேறு விதமாகச் சொல்லப்பட்டால் அதில் காலத்தால் முந்தையதையே வலுவான ஆதாரமாகக் கொள்ள வேண்டும். காலத்தால் பிற்பட்ட விடயத்தில் பல இடைச்செருகல்களும் பின்னிணைப்புகளும் இருக்கலாம். உதாரணமாக மீண்டும் இராமாயணத்துக்கே போவோம். வரலாற்று ரீதியாக இராமன் என்ற அரசனின் வாழ்வை அறிய சரியான மூலம் வடமொழி வான்மீகி இராமாயணமா, அதற்கு பல நூற்றாண்டுகள் பிந்தைய தமிழ் கம்ப இராமாயணமா என்று கேட்டால்,, அக்கேள்விக்குப் பதில், வடமொழி வான்மீகி இராமாயணம் என்பதே. ஆனால், நம்மவர்கள், அவை இரண்டுக்கும் இடையேயுள்ள காலவேறுபாட்டைக் கருத்தில் கொள்ளாமல், இரண்டிலுள்ள விடயங்களையும் ஒன்றாகக் கூறி குழப்பி அடித்துக் கொள்வார்கள்.

ஆக, இந்த மூன்று குறைபாடுகளும் இல்லாத, அல்லது இந்த மூன்று குறைபாடுகளைத் தவிர்க்க முயன்ற ஒரு ஆய்வையே திருத்தமான வரலாற்று ஆய்வு என்று சொல்லவேண்டும். இது மூன்றையும் கருத்தில் எடுக்காத எந்தவொரு ஆய்வும் மீள்பரிசீலனைக்குரியதே.

இத்தகைய ஒரு தெளிவை இந்தக் கட்டுரையாளன் பெற்றுக்கொள்வதற்கு நிறைய வாசிக்க வேண்டி இருந்தது, நிறைய பக்குவப்பட வேண்டியிருந்தது. ஆனால், இத்தகைய தெளிவை வெறும் இருபத்தொரு வயதிலேயே பெற்றுக்கொள்வதும், ஒரு நூலொன்றை எழுதி வெளியிடுவதும், எத்தகைய ஒரு சாதனை? அதுவும், கிழக்கிலங்கையில் பிறந்து வளர்ந்த ஒரு இளைஞன் இத்தகைய பரந்த அறிவைப் பெற்றுக்கொள்வதென்பது எத்தகைய மகத்தான தேர்ச்சி?

அந்த இளம் ஆய்வாளர், சம்மாந்துறையைச் சேர்ந்த "மொஹமட் இப்ராஹிம் மொஹமட் சாக்கீர்". இருபத்தொரு வயதில் அவரால் எழுதப்பட்டு சம்மாந்துறை வாழும் கலை இலக்கிய வட்டத்தால் வெளியிடப்பட்ட நூல் 'சம்மாந்துறை - பெயர் வரலாறு'.

சம்மாந்துறை கிழக்கிலங்கை வரலாற்றில் மிக முக்கியமான ஒரு நகரம். ஐரோப்பியர் ஆவணங்களில் 'மட்டக்களப்பு' என்று மீண்டும் மீண்டும் கூறப்பட்ட பண்டைய மட்டக்களப்புத் தேசத்தின் தலைநகர் சம்மாந்துறையை அண்டித்தான் அமைந்திருந்தது. சம்மாந்துறை, அந்தத்

**வி.துலாஞ்சனன்**

தலைநகரின் நீர்ப்போக்குவரத்துக்கான துறையாகவும், வர்த்தகக் குடியிருப்பாகவும் அமைந்திருந்தது. அத்தகைய பழம்பெரும் நகரின் இடப்பெயராய்வே இந்நூலின் பிரதான பேசுபொருள்.

நூலின் ஆரம்பத்தில் அமைந்த முக்கியமான சம்மாந்துறை ஆளுமைகளின் விதப்புரைகள், க.பொ.த உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு சாக்கீர் செய்த ஆய்வுகளையும், அந்த ஆய்வுகளை இட்டுக் கொண்ட வியப்பையும், அந்த ஆய்வுகளிலுள்ள பக்கச்சார்பின்மையையும் புகழ்வனவாக அமைந்துள்ளன. உள்ளே நூலானது, இடப்பெயர் ஆய்வு, சம்மாந்துறை, பின்னிணைப்புகள் ஆகிய முப்பெரும் அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று அத்தியாயங்களும் தோண்டத் தோண்டத் தெவிட்டாத தகவல் சுரங்கங்கள் என்பதே அவற்றின் அழகு.

இடப்பெயர் ஆய்வு எனும் முதல் அத்தியாயத்தில், இடப்பெயர்கள் இயற்கையையும் ஆட்பெயரையும்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# முருகபூபதியின் 'சொல்லத்தவறிய கதைகள்' – புதிய நூல் பாரிஸில் அறிமுகம்



அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் படைப்பிலக்கியவாதியும், ஊடகவியலாளருமான முருகபூபதியின் புதிய வரவு, சொல்லத்தவறிய கதைகள் நூலின் அறிமுக அரங்கும், முருகபூபதியுடனான இலக்கியச்சந்திப்பும் எதிர்வரும் பெப்ரவரி 03 ஆம் திகதி (03-02-2019) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு பாரிஸில் எழுத்தாளர் வாசுதேவன் தலைமையில் நடைபெறும். நிகழ்ச்சி நடைபெறும் முகவரி:

TIASCI --- 13, RUE DE L'AQUEDUC ---- 75010 PARIS .

பாரிஸிலிருந்து வெளியாகும் "நடு" இணைய இதழின் ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சியை "நடு" ஆசிரியர் எழுத்தாளர் கோமகன் ஒழுங்குசெய்துள்ளார்.

சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம், கடித இலக்கியம், நேர்காணல், ஆய்வு, பத்தி எழுத்துக்கள் முதலான துறைகளில் எழுதிவரும் முருகபூபதி, சொல்லமறந்த கதைகள் ( தமிழ்நாடு மலைகள் பதிப்பகம்) - சொல்லவேண்டிய கதைகள் (இலங்கை ஜீவநதி வெளியீடு) ஆகிய நூல்களை ஏற்கனவே வரவாக்கியவர். அதன் தொடர்ச்சியாக வெளியாகும் புதியநூல்: சொல்லத்தவறிய கதைகள்.

இதனை இலங்கையில் மகிழ் பதிப்பகத்தின் சார்பாக எழுத்தாளர் கருணாகரன் வெளியிட்டுள்ளார். இந்நூலின் முகப்பினை சிட்னியில் வதியும் எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளரும் ஒளிப்படக்கலைஞியுமான கீதா மதிவாணன் வடிவமைத்துள்ளார்.

"சொல்லத்தவறிய கதைகள் ஒருவகையில் வரலாற்றின் சாயல்கொண்டவை. இன்னொருவகையில் சமூகவியலின்பாற்பட்டவை. இன்னொரு கோணத்தில் எம்முள்ளும் எம்மைச்சுற்றியும் நிகழ்ந்தவற்றின் கதைகள். எல்லாவற்றுக்கும் அப்பால் நாம் கவனித்தேயாகவேண்டிய கதைகள். முருகபூபதி இலக்கியவாதியாகவும் ஊடகச்செயற்பாட்டாளராகவும் இருப்பதனால் இந்தப்பதிவுகள், வாசிப்பு சுவாரசியத்தை அளிக்கின்றன. கூடவே ஆழ்தரிசனத்தையும் கொண்டிருக்கின்றன. இங்கே ஆழ்தரிசனமாக வெளிப்பாடடைவது, இவற்றில் உள்ள உண்மையும் சமூக அக்கறையுமாகும். சொல்லத்தவறிய கதைகள் எப்படிசொல்லப்படுவதற்கான அவசியத்தைக்கொண்டிருக்கின்றனவோ அதைப்போல அவற்றை நாமும் வாசித்தே ஆகவேண்டும் என்பது அவசியமாகிறது. இன்றைய இந்தப்பதிவுகளும் வெளிப்பாடுகளும் நாளைய வரலாற்றுக்கு மிகப்பெரிய ஒளியூட்டியாக இருக்கும்" - ( மகிழ்)

இந்த நூலில் இடம்பெறும் பதிவுகளில் சில யாழ்ப்பாணம் காலைக்கதிர், கொழும்பு தினக்குரல், மட்டக்களப்பு அரங்கம் பத்திரிகைகளிலும் மல்லிகை மற்றும் ஜெர்மனி தேனீ, அவுஸ்திரேலியா தமிழ் முரசு - அக்கினிக்குஞ்சு, கனடா பதிவுகள் , லண்டன் எதுவரை முதலான இணைய இதழ்களிலும் வெளியாகியிருக்கின்றன. அத்துடன் அவுஸ்திரேலியாவில் நடேசனின் வலைப்பூவிலும் கலை இலக்கிய ஆர்வலர்களின் முகநூல்களிலும் இடம்பெற்றுள்ளன.



# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 20

## இலங்கை அதிபர் சேவை தரம் III போட்டிப் பரீட்சை

- மட்டுநகர் யுவன் -

### கிரகித்தல் (பொது அறிவுறுத்தல்கள்)

பின்வரும் உரைப்பகுதியினை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக. இதற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) "மனித நடத்தைகளில் மிக உன்னதமானது, கற்றல். இது பரந்து – பரமானந்தம் தருவது. கற்றலைச் சரியாக விளங்கும் போது கற்கக் கற்றல் தேர்ச்சியை விளங்கிக்கொள்ளலாம். ஒவ்வொரு ஆசிரியரும் அதிபரும் கல்விப் பணிப்பாளர்களும் கல்வியியலாளர்களும் கல்விக்கொள்கை வகுப்போரும் இதனை விளங்கிச் செயற்படும் போது பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுடன் புதிய மாற்றங்களையும் சரியாக ஏற்படுத்தமுடியும். இவ்வகையில் கற்றல் என்பது புறச்சூழலுக்கும் மனித மூளைக்கும் இடையே நிகழும் தொடர்ச்சியான செயல்முறையாகும். அது, தொடர்ந்து மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் அபிவிருத்தி களையும் விழுமியங்களையும் ஏற்படுத்துகிறது. சிந்தனைகளில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்து கின்றது. இது தொடர்ச்சியான, ஒவ்வொருவருக்குமுரிய தனித்துவங்களுடன் தொடர்புடையதாக வுமுள்ளது. அனுபவங்களின் திரட்சியாகவும் அமைகின்றது. மனித வள மேம்பாடுகளுடனும் தொடர்புடையது. அனுபவங்களின் திரட்சியாகவும் அமைகின்றது. இக்கற்றல் வெற்றி பெறக் கற்கும் கவின்நிலை, மகிழ்வூட்டுவதாக – உற்சாகமளிப்பதாக சுதந்திரமானதாக இருத்தல் வேண்டும். கற்பவர்கள் கற்கக் கற்றல் தேர்ச்சியைச் சிறப்பாகப் பிரயோகிப்பார்களாயின் கற்றல் அடைவுகளில் உயர்வதுடன் சிறந்த நற்பிரசைகளாக வாழக்கூடிய தேர்ச்சிகளையும் பெற்றுக்கொள்வார்கள்.

(ii) "கல்வி முறையின் மறுபக்கத்தில், நகர்ப்புறப் பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் பயிலும் மத்திய வகுப்புப் பிள்ளைகளும் நவீனமயப்படுத்தப்பட்ட கல்வியைப் பெறுகின்றார்கள் என்று கூறுவதற்கில்லை. உலகளாவிய ரீதியில் கல்விச் சிந்தனைகள் எவ்வளவுதான் நவீனமயப்படுத்தப்பட்டாலும் இந்தியக் கல்விமுறை அவற்றை உள்வாங்குவதில்லை. மாணவர்கள் பழைய பாணியிலேயே மனனம்செய்து கற்கின்றனர். சிறுவயதிலிருந்தே கல்விப் போட்டியில் ஈடுபட்டுப் பல உளப் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். சிறந்த பாடசாலைகளில் அனுமதி பெற ஏராளமான தகவல்களை மனனம் செய்கின்றனர். சுதந்திரமாக விளையாட்டில் ஈடுபட்டுப் பல புதிய அனுபவங்களைப் பெறவேண்டிய வயதில் பெற்றோர் ஆசிரியர்களின் வற்புறுத்தலுக்காக விரும்பாத கல்வியை அவர்கள் பெறவேண்டியுள்ளது. இளம்வயதில் கட்டாயமாகக் கல்வி பெறவேண்டிய சிறார்கள்மீது சுமத்தப்படும் முதிர்ச்சி நிலைக்குப் பொருத்தமற்ற கற்பித்தல் முறைகள் பல கல்வியாளர்களைச் சிந்திக்கவைத்துள்ளது.

(iii) "ஆரம்பக் கல்வி, எழுத வாசிக்கப் பயிலுவதற்கும் சில குறிக்கப்பட்ட பாடநூல்களை மனனம் செய்வதற்கும் வசதியளித்தது. கணதெவிஹல்ல என்னும் கண்டிக் காலத்து நாட்டுப்பாடல், ஒரு மாணவனுக்கு ஏடு துவக்குவதுபற்றி விரிவாகக் கூறுகின்றது. இதனுள் ஆரம்பக் கல்வியின் படிமுறைகள் தம்பதேணி கதிகாவதத்திற் கூறியிருப்பதனினும் விரிவாகக் கூறப்பட்டுள. இந்நூலின்படி ஆரம்பக் கல்வியின் பாடவிதானம் அரிச்சுவடி படித்தல், அடையாளம் படித்தல், மணற்பலகையில் எழுதுதல், கிராமப் பெயர்களை மனனம் செய்தல், நாட்டுப்பாட்டு, வதன்கவி, புத்த ஹஜ்ஜய ஆதியவற்றைக் கொண்டதாகும்.

தம்பதேணிக் காலத்திலிருந்து ஆரம்பக் கல்விக்கென வழக்கிலுள்ள நூல் சகஸ்கடய ஆகும். இது கடுமையான எச்சரிப்புச் சொற்கள் சேர்ந்த கலப்புச் சிங்களத்தில் எழுதிய வசன நூல். வாசிப்புத் தாடனத்துக்காக அமைந்தது. இதனைப் பிழையற வாசிப்பதற்குச் சிங்களம், பாளி, சங்கதம் ஆகிய மும்மொழிகளிலுள்ள நெடுங்கணக்கும் உயிர்மெய்யெழுத்துச் சேர்க்கைகளும் அறிந்திருத்தல் வேண்டும்.

**இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் கிரகித்தல் தொடர்பான வேண்டுகோள்களை முன்வைப்பீர்களாயின் அவை கவனத்திற் கொள்ளப்படும். — ஆ-ர்.**

## முக்காலமும் உனைப் போற்றும்

கவிஞர் க. ரெட்ணையா, கன்னன்குடா - 2

கணவனை மதிக்காத மனைவி
கடவுளைத் துதிக்காத துணைவி
மணவாழ்வில் இணைந்ததே பாவம்
மற்றோரை மதித்தென்ன லாபம்
பணமில்லாப் போதிலும் அன்பு
பாசத்தைக் காட்டிடும் மனைவி
குணத்தாலே உயர்ந்திட்ட துணைவி
குடும்பப் பெண்ணிலே மேலானசாதி

தர்மம் செய்யாத மனைவி
தலைவனைப் பணியாத துணைவி
தாரமாய் வந்தாலே பாவம்
தாய்மை அடைந்தென்ன லாபம்
சீர்தான் இல்லாத போதிலும்
சிறப்பாய் வாழாத போதிலும்
பேராசை கொள்ளாத மனைவி
பெருமைப் பெண்ணிலே மேலானசாதி

சிக்கனம் பேணாத மனைவி
சிந்திக்கத் தெரியாத துணைவி
பக்கத்தில் இருந்தாலே பாவம்
பார்த்துப் பல்லிளித்தென்ன லாபம்
அக்கம் பக்கத்தில் உள்ளோர்மீது
அன்புடன் வாழ்ந்திட்டால் போதும்
முக்காலமும் உனைப் போற்றும்நீ
முழுமைப் பெண்ணிலே மேலானசாதி

## பெண்மகள்

-- யூனா--

பூக்கள் சூடச்சூட
நீ பூமகள்
பொன்னைப் போடப்போட
நீ பொன்மகள்
பூ இருந்தாலும் இல்லாவிட்டாலும்
பொன் இருந்தாலும் இல்லாவிட்டாலும்
நீ பெண்மகள் - இதை
மறக்காமல் வாழ்
மாண்பு பெறுவாய்





# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்


குணம் சவரிராஜா

**02 தொடர்ச்சி...**

16. நீரின் மேற்படி இயல்புகள் நீர் மூலக்கூறின் இரசாயனக் கட்டமைப்பின் அடிப்படையில் அமைந்தவையாகும். நீர் மூலக்கூறுகளினது பௌதிக, மற்றும் இரசாயன இயல்புகள் வற்றுக்குரிய ஆற்றலை வழங்குகின்றன. நீர் மூலக்கூறின் இரசாயனக் கட்டமைப்புக்குரிய மற்றும் தொழிற்பாட்டுக்குரிய அம்சங்களை விபரிக்க


- நீரானது ஒரு சிறிய, முனைவுக்குரிய மற்றும் கோணவுருவான மூலக்கூறாகும்.

நீர் மூலக்கூறின் இரசாயனக் கட்டமைப்பு




- முனைவுத்தன்மை என்பது ஒரு மூலக்கூறின் உள்ளே விநியோகிக்கப்பட்டிருக்கும் ஓர் சமமற்ற ஏற்றம் ஆகும்.
- நீர் மூலக்கூறில், ஒட்சிசன் அணுவானது சற்று மறையேற்றம் உடையதாகவும், ஐதரசன் அணு சற்று நேரேற்றம் உடையதாகவும் இருக்கும்.
- ஒரு நீர் மூலக்கூறினது சற்று முனைவுத்தன்மையுடைய ஐதரசன் அணுவுக்கும் பக்கத்திலுள்ள நீர் மூலக்கூறினது சற்று முனைவுத்தன்மை உடைய ஒட்சிசன் அணுவுக்கும் இடையே காணப்படும் வலுவற்ற கவர்ச்சிகள் ஐதரசன் பிணைப்புகள் என அழைக்கப்படும்.
- இந்த ஐதரசன் பிணைப்புகள் நீரின் அனைத்து இயல்புகளையும் பேணுவதில் முக்கியமானதொரு பங்கினை வகிக்கின்றன.

நீரில் காணப்படும் ஐதரசன் பிணைத்தல்




- நீரின் பண்புகள் வெவ்வேறு நீர் மூலக்கூறுகளின் கவர்ச்சி காரணமாகத் தோன்றுகின்றன.
- நீர் திரவ நிலையில் இருக்கும்பொழுது அதன் ர் பிணைப்புகள் மிகவும் உடையுந்தன்மை உடையனவாகக் காணப்படுகின்றன.
- **H** பிணைப்புகள் உயர் மீடிறனுடன் உருவாவதும், உடைவதும், மீள்தோற்றமுறுவதுமாக உள்ளன.

17. புவியில் உயிர் வாழ்க்கையைப் பேணுவதற்கு நீரில் காணப்படும் நான்கு பிரதான இயல்புகள் யாவை?
    - பிணைவுக்குரிய நடத்தை
    - வெப்பநிலைக்கு ஏற்புடைய ஆற்றல்
    - உறைதலின்போது விரிவடைதல்
    - ஓர் கரைப்பானாகக் காணப்படும் ஆற்றல்.

18. நீர் மூலக்கூறுகள் சார்பாக பிணைவு மற்றும் ஒட்டற்பண்பு ஆகியவற்றை விளக்குக. உயிர் அங்கிகளில் இப் பண்புகளின் முக்கியத்தைக் குறிப்பிடுக.
    - ஐதரசன் பிணைப்படைதல் காரணமாக நீர் மூலக்கூறுகளுக்கிடையே தொழிற்படும் கவர்ச்சி பிணைவு என அழைக்கப்படும்.
    - நீர் மூலக்கூறுகளுக்கும் பிற பதார்த்தங்களுக்கும் இடையே தொழிற்படும் கவர்ச்சி ஒட்டற்பண்பு என அழைக்கப்படும்.
    - தாவரங்களில் நீர் மூலக்கூறுகளுக்கிடையிலான பிணைவு காரணமாக நீரும், கனிப்பொருட்கள் மற்றும் போசணைப்பதார்த்தங்கள் போன்ற கரைந்துள்ள பதார்த்தங்களும் காழ் மற்றும் உரியம் ஆகிய கலனிழையங்களுக்கூடாக புவியீர்ப்புக்கு எதிராகக் கடத்தப்படுகின்றன.
    - தாவரங்களில் நீர் மூலக்கூறுகளுக்கும் கலச்சுவர்களுக்கும் இடையிலான ஒட்டற்பண்பு நீர் மற்றும் கரைந்துள்ள பதார்த்தங்களின் கடத்தலுக்கு உதவுகின்றது.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# விளையாட்டு

## இந்திய அணியின் வெற்றிக்கு காரணம்



**இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையே நேப்பியரில் நடைபெற்ற முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.**

5 ஒருநாள் போட்டிகள் கொண்ட இந்த தொடரின் முதல் போட்டியில் இந்தியா இமாலய வெற்றி பெற்றுள்ள நிலையில், அது தொடர்பான 5 முக்கிய காரணங்கள் இவை.

### ஆஸ்திரேலிய தொடர் வெற்றி அளித்த நம்பிக்கை

கடந்த வாரம் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அந்நாட்டில் நடந்த ஒருநாள் போட்டி தொடரில் 2-1 என்று வென்ற இந்தியா இப்போட்டியில் மிகவும் நம்பிக்கையுடன் வலிமையாக காணப்பட்டது.

களத்தில் இந்திய பந்துவீச்சாளர்களும், தடுப்பாளர்களும் ஆக்ரோஷமாக செயல்பட்டமை அணியின் வெற்றிக்கு காரணமாக அமைந்தது.

### ஷமியும், சுழல் பந்து வீச்சாளர்களும்

தொடக்கம் முதலே இந்திய பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சில் நியூசிலாந்து அணியினர் தடுமாறினர். குறிப்பாக சிறப்பாக பந்துவீசிய வேகப்பந்துவீச்சளர் முகமது ஷமி, மார்ட்டின் கப்தில் உள்பட 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நியூசிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இப்போட்டியில் இந்திய சுழல் பந்துவீச்சாளர்கள் 7 விக்கெட்டுகளை வீழ்த்தியது வியப்பை ஏற்படுத்தியது.

குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகளையும், சாஹல் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

முகமது ஷமி, குல்தீப் யாதவ் மற்றும் சாஹல் ஆகிய மூவரும் மொத்தமாக வீசிய 26 ஓவர்களில் 101 ரன்களை மட்டும் கொடுத்து 9 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

### சூழலை கணிக்க தவறிய நியூசிலாந்து பேட்ஸ்மேன்கள்

ஆட்டம் தொடங்கியவுடன் நியூசிலாந்து பேட்ஸ்மேன்கள் தடுமாறியதற்கு பெரும் காரணம் அவர்கள் ஆடுகளம் மற்றும் பந்துவீச்சை சரியாக கணிக்க தவறியதுதான்.

குல்தீப் யாதவ், சாஹல் போன்ற பந்துவீச்சாளர்களை பல நியூசிலாந்து பேட்ஸ்மேன்கள் இதுவரை அதிகமாக எதிர்காணாதது அவர்களை சந்திப்பதில் தடுமாற்றத்தை ஏற்படுத்தியது.

### ஷிகர் தவான், கோலி அபாரம்

இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரரான ஷிகர் தவான் 103 பந்துகளை சந்தித்து 75 ரன்களை எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தது, இந்திய அணிக்குஅதிக வலிமை சேர்த்தது. இந்த போட்டியில் 5000 ரான்கள் கடந்த வீரர் என்ற பெருமையை ஷிகர் தவான் பெற்றுள்ளார்.

விரைவாக 5 ஆயிரம் ரன்களைக் கடந்த இந்தியர்களில் 118 இன்னிங்ஸ்களுடன் 2-ஆம் இடத்தைப் பிடித்தார். 114 இன்னிங்ஸ்களுடன் விராட் கோலி முதலிடத்தில் நீடிக்கிறார்.

விரைவாக 5 ஆயிரம் ரன்களைக் கடந்த இடதுகை ஆட்டக்காரர்களின் பட்டியலில் பிரையன் லாரா உடன் ஷிகர் தவன் முதலிடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

ஷிகர் தவானோடு சேர்ந்த வீராட் கோலி பொறுப்பாக ஆடி 59 பந்துகளை சந்தித்து 45 ரன்களை எடுத்து இந்திய அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

### இந்தியாவுக்கு சாதகமாக மாறிய ஆடுகளம்

டாஸ் வென்று முதலில் பேட்டிங்கை தேர்வு செய்த நியூசிலாந்து அணிக்கு ஆடுகளம் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு சாதகமாக அமையவில்லை.

வேக பந்துவீச்சுக்கு ஆடுகளம் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்தியாவின் சுழல் பந்துவீச்சு பெரிதும் எடுபட்டது.

கனே வில்லியம்சன் எடுத்த அதிகபட்ச 64 ரன்களுக்கு அடுத்து, அதிகபட்ச ரன்களே ரோஸ் டெய்லரின் 24 ரன்கள்தான்.

ஆனால், இரண்டாவதாக இந்திய அணி ஆடிய நிலையில், இந்த ஆடுகளம் சாதகமாக அமைந்தது என்னலாம். நியூஸிலாந்தின் பந்துவீச்சை இந்திய அணியினர் எளிதாக அடித்து ஆடினர்.

அதனால்தான் 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து, 34.5 ஓவர்களில் நிர்ணயிக்கப்பட்ட ரன்களை குவித்து இந்தியா மாபெரும் வெற்றி பெற்றுள்ளது.

## 144 ஓட்டங்களுக்குள் சுருண்ட இலங்கை அணி



இலங்கை அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

அவஸ்திரேலியா- இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி இன்று பிரிஸ்பேனில் தொடங்கியது. நாணய சுழற்சியை வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட்டத்தை தேர்வு செய்தார்.

இதை தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களை பெற்றுள்ளது.



## மட் / கொக்குவில் விக்நேஸ்வரா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி



கடந்த 22-01-2019 இல் மேற்படி வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலய (சிறிய) மைதானத்தில் அதிபர் திரு.பகிரதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வே.மயில்வாகனம் (இ.க.நி.சே-தரம் ஐ) அவர்களும் ஏனைய விருந்தினர்களாக திரு.கே.அருட்பிரகாசம் (கோட்டக் கல்வி அதிகாரி – மண்முனை வடக்கு) அவர்களும் திரு.வா.லவக்குமார் (உதவிக் கல்விப் பணிப்பாளர்- உடற்கல்வி) அவர்களும் கலந்து சிறப்பித்தனர். பாடசாலையின் வளர்ச்சிபற்றி அதிகாரிகள் நேர்சிந்தனையுடன் பேசியமை கவனத்துக்குரியது.

2019இல் மட்டக்களப்பு வலயத்தில் நடந்த முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

## கிராமியத் தெய்வங்களும் வழிபாடுகளும்

# சிறு வணக்கங்களுடன் சம்பந்தப்பட்ட ஆட்ட முறை கலந்து நாடக அமிசம் நிரம்பிய சடங்குகள்

மட்டக்களப்பின் வணக்க முறைகளில் சிறு தெய்வங்கள் பிரதான பங்கு பெறுகின்றன. சிவன், திருமால், முருகன், பிள்ளையார் போன்ற பெருந்தெய்வங்களுக்குரிய கோயில்கள் ஊர்கள் தோறும் உள்ளன. அக்கோயில்களில் தினமும் பூசைகள் நடைபெறுகின்றன. எனினும் ஆண்டுக்கொருமுறை குறிப்பிட்ட தினங்களிலே சிறு தெய்வங்களுக் குரிய கோயில்களில் பூசை நடைபெறுகிறது.



இப்பூசை "சடங்கு" என்ற பெயரால் அழைக்கப்படுகிறது வைரவர் கோயிற் சடங்கு, கண்ணகி அம்மன் கோயிற் சடங்கு என்ற சொற் பிரயோகங்களை கவனிக்குக. ஊர்கள் தோறும் சிறு தெய்வங்களுக்குரிய கோயில்கள் உள்ளன. கட்டப்பட்ட கோயில்கள் இல்லாது ஒரு குறிப்பிட்ட இடத்தில் சிறு தெய்வ வணக்கத்தை ஆண்டுதோறும் நடாத்தும் ஊர்களும் உண்டு. இத்தகைய ஆண்டுச் சடங்குகள் அவ்வக் கிராமங்களில் மிகப் பிரதானமானவையாகக் கணிக்கப்படுகின்றன. கிராம மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன. அவர்களின் கலாசாரம், பண்பாடு உளவியல் பிரதிபலிப்புக்களாயுள்ளன. கிராமத்தவரின் சமூக உறுதிப் பாட்டைத் தருவனவாகவும் இவை உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்டதொரு தினத்தில் அக்கோவில் கதவு திறக்கப்பட்டு 5 அல்லது 6 அல்லது 7 நாட்கள் சடங்கு முடிந்த பின் கோவிற் கதவு சாத்தப்படும், பீன்னர் அடுத்த ஆண்டுதான் அக்கதவு திறபடும். இந்த நாட்கள் அவ்வூரின் புனித நாட்களாகும். மட்டக்களப்புப் பகுதியில் ஏறத்தாழ ஐம்பதுக்கு மேற்பட்ட சிறு தெய்வங்களை மக்கள் வழிபடினும் மிகப் பிரதானமான சிறு தெய்வங்களாகக் சிலவே கொள்ளப்படுகின்றன.

மட்டக்களப்பின் சாதி அமைப்பினைப் பின்னணியாகக் கொண்டு பார்க்கும்போது சில தெய்வங்கள் சில சாதியினருக்குப் பிரதான தெய்வமாகக் காணப்படுகின்றன. குறிப்பிட்ட சாதியினருக்குப் பிரதான தெய்வமாகக் காணப்படும் தெய்வம் வேறோர் சாதியினரால் வணங்கப்படினும் அது பிரதானம் குறைந்த தெய்வமாகக் காணப்படுகிறது.

பிரதான தெய்வத்திற்கென அமைந்த கோயிலில் அமைக்கப்பட்ட சிறு சிறு பந்தல்களில் பிரதானம் குறைந்த ஏனைய சிறு தெய்வங்களுக்குப் பூசை நடைபெறுகிறது. ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு பிரதான தெய்வமுண்டு. எனினும் அப்பிரதான தெய்வத்துடன் வேறு பல தெய்வங்களுக்குப் பந்தலிட்டு ஒரு கோயிலிலேயே வண்ங்கும் முறை இங்கு உண்டு. ஆனால் பெரிய கோயிலும் மூலஸ்தானமும் பிரதான தெய்வத்திற்கே உரியவை. உதாரணமாக நரசிங்க வைரவரைப் பிரதான சிறு தெய்வமாகக் கொண்ட நரசிங்க வைரவ சுவாமி கோயிலில் சிங்கனாதம், கங்காதேவி, காத்தவராயன், காளி, மாறா, வதனமார், மாரியம்மன், திரிசூல வைரவன், வீரபத்திரன். கிரஹசாந்தி, ஐயனார் போன்ற சிறு தெய்வங்களுக்குத் தனித்தனிப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அவற்றிற்குப் பூசை நடைபெறுவதுண்டு.

காளியைப் பிரதான தெய்வமாகக் கொண்ட காளி கோயிலில் மாரியம்மன், பேச்சியம்மன், பிறத்தி சங்கிலி காளி, வீரபத்திரன். வதனமார், நரசிங்கம், அனுமார், கங்காதேவி, திரிசூலவைரவர், ஆதி வைர வர், ஆகிய தெய்வங்களுக்கு எனத் தனிப் பந்தல்களுண்டு.

கண்ணகி அம்மனைப் பிரதான தெய்வமாகக் கொண்ட கோயில்களில் மாரியம்மன், காளியம்மன். வீரபத்திரன், ஆதி வைரவர் ஆகிய தெய்வங்களுக்குத் தனிப் பந்தல்களுண்டு. பெரிய தம்பிரானைப் பிரதான தெய்வமாகக் கொண்ட கோயில்களில் மாரியம்மன், காத்தான், நீலாசோதயன், கம்பகாமாட்சி, பத்தினியம்மாள், வதனமார், காடேறி, பேய்ச்சியம்மன், அனுமார், சிங்கனாத வைரவர், பிரத்தியங்கிரிக் காளி, ஆகிய தெய்வங்களுக்குப் பந்தல்களுண்டு.

சாதிக்கொரு தெய்வமும் வணக்க முறைகளிற் சிற்சில வேறுபாடுகளும் இருப்பினும் கோயில் அமைப்பு முறையிலும், பந்தல்களைக் கோயிலை மையமாகக் கொண்டு அமைக்கும் முறையிலும், சடங்குகளை நிகழ்த்திக் காட்டுகையில் மக்கள் கோயிலைச் சுற்றி வட்டமாக அமர்ந்திருந்து பார்க்கும் முறையிலும், சடங்குகளில் மக்கள் பங்காளராகவும், பார்வையாளராகவும் இடம்பெறும் வகையிலும் சகல சாதியினரிடத்தும் ஒற்றுமை காணப்படுவது இங்கு




அவதானத்திற்குரியது.

மட்டக்களப்பு கோயில்கள் கற்களால் கட்டப்பட்டமை மிகப் பிற் காலத்திலாகும். முன்பு மரத்தடியில் பந்தலிட்டு வணங்கும் வணக்க முறையே இருந்தது. பின்னாளில் பல தெய்வங்களுக்கும் பந்தலிட்ட போதே அமைப்பு முறை உருவாகியிருக்க வேண்டும். இன்றும் மட்டக்களப்பில் எல்லாச் சிறு தெய்வங்களுக்கும், கட்டப்பட்ட கோயில்கள் உள்ளன என்ற கூறமுடியாது.இவற்றிற்கெனச் சிறு சிறு பந்தல்களே சில இடங்களிலுண்டு.

### பொருளாதார பலமும் கோவில்களும் பந்தல்களும்

---

பந்தல்கள் அமைக்கப்பட்ட கோயிலாக இருப்பதும், கற்களால் கட்டப்பட்ட கோயில்களாக அமைவதும் அவ்வச் சாதியினரின் பொருளாதாரத் தன்மையைப் பொறுத்ததாய் உள்ளது. அதேபோல புராதனத் தன்மை பேணப்படுவதும், நவீனத்துவங்கள் புகுத்தப்படுவதும் கூட அவ்வச் சாதியினரின் பொருளாதார வளர்ச்சி, வளர்ச்சியின்மையைப் பொறுத்தது. முன்பொரு காலத்தில் வேடர், வேட வெள்ளாளர் போன்ற மிகப் பின்தங்கிய குழுவினரின் கோயில்கள் பெரும்பாலும் பந்தல் நிலையிலிருந்தன.

அவர்களைவிட சற்று வளர்ச்சி பெற்ற பறை அடிக்கும் தொழில் புரிவோர், சலவைத் தொழில் புரிவோர் போன்றோரின் கோயில்கள் சில இடங்களில் ஒலையால்




வேயப்பட்டனவாகவும் சில இடங்களில் மூலஸ்தானம் மாத்திரம் கற்களால் கட்டப்பட்டனவாகவும் இருந்தன. அவர்களைவிட பொருளாதாரத்தில் வளர்ச்சியுற்ற சீவல் தொழிலாளரின் கோயில் மண்டபங்களைக் கொண்டதாய் இருந்தது. பொருளாதார பலம் பெற்ற ஏனையோரின் கோயில்கள் கல் மதில்களோடு அமைந்திருந்ததனைக் காணமுடிந்தது. இன்றோ அனைவரிடமும் பொருளாதார வசதியுண்டு, தம் வசதிகளை வெளிப்படுத்தும் வகையில் இன்று அவரவர் பொருளாதார வசதிக்கு ஏற்ப கோவில்களும் வழிபாடுகளும் மாறி விட்டன."

(தொடரும்)






# பெண்களின் மாதவிடாய் (Menses) பற்றி நமது கலாச்சாரத்தில் அடங்கும் கட்டுப்பாடுகளும் அதன் உண்மையான அர்த்தங்களும்.

நமது சமூகத்தில் வெளிப்படையாக பேசக் கூடாது என்று சிலவற்றை காலங்காலமாக ஒதுக்கி வைத்திருக்கிறோம். அப்படி ஒரு விடயத்தைப் பற்றித்தான் இங்கு பார்க்க போகிறோம். பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் (menses) என்பது என்ன? அந்த குறிப்பிட்ட நாட்களில் பெண்களை கோவிலுக்கு போக கூடாது, வெளியே போக கூடாது என்றெல்லாம் கூறுவது ஏன்? இவைகளை தான் இங்கு பார்க்கப் போகின்றோம்.

மாதவிடாய் (menses) என்றால் என்ன?

Menstruation cycle அதாவது ஒரு பெண்ணின் உடலில் இருபத்தியெட்டு நாட்களுக்கு ஒரு முறை ஒரு கருத்தரிப்பதற்கான முட்டை உருவாகின்றது. அந்த சமயத்தில் ஒரு ஆணின் விந்து உள்ளே செல்லும் போது அங்கு கருமுட்டை உருவாகி அதில் ஒரு புதிய உயிர் உருவாகின்றது.

அந்த இருபத்தியெட்டு நாட்களில் ஒரு ஆணின் விந்து உள்ளே போகாமல் இருக்கும் பட்சத்தில் பெண்ணின் உடலிலிருந்து அந்த கரு உருவாகக்கூடிய முட்டை திரவமாக அதாவது இரத்தமாக வெளியேறுகின்றது. இருபத்தியெட்டு நாட்களில் அது ஒரு உயிராக உருவாக வேண்டும். அப்படி உருவாகாவிட்டால் அத்திரவம் உடலில் இருப்பது உடலுக்கு கேடு; அதனால் உடல் அதை வெளியேற்றுகின்றது. இதைத்தான் மாதவிடாய் (menses) என்கிறோம்

இது 3-7 நாட்கள் வரை இருக்கும். அது ஒவ்வொரு பெண்களின் உடல்நிலையை பொறுத்து வேறுபடும்.

இது ஒரு எதிர்மறை ஆற்றலாகும் (Negative energy) .

இந்து மதத்தில் பெண்களை மாதவிடாய் (menses) நாட்களில் ஏன் கோவிலுக்கு போக கூடாது என்கிறார்கள்?

இது மூட நம்பிக்கை என நம்மில் பலர் சொல்கிறோம். ஆனால் இதன் உண்மையான விளக்கத்தை நாம் பார்த்தோம் என்றால், இந்து மதத்தில் பெரும்பாலும் கோவில்கள் பழமை வாய்ந்த கட்டடக்கலையாகும். கோவில்களில் நேர்மறை ஆற்றல்

**சகி**

(Positive energy) அதிகம் உள்ளதாக சொல்லப்படுகின்றது. அதனால் தான் நாம் கோவிலில் இருக்கும் போது நேர்மறையான எண்ணங்களை (Positive thinking) உணர்கிறோம். மேலும் அதனால் தான் கோவிலுக்குள் செல்லும் போது ஒருவித மனநிம்மதியை அனுபவிக்கிறோம். மாதவிடாய் (menses) நாட்களில் பெண்களிடம் இருந்து எதிர்மறை ஆற்றல் வெளியேறுவதால் ஒரு பெண் கோவிலுக்குள் செல்லும் போது அங்குள்ள நேர்மறை ஆற்றலானது (Positive energy) அந்த பெண்ணின் எதிர்மறை ஆற்றலை வெளியேற விடாமல் தடுக்கக்கூடும், அப்படி அது வெளியேறாவிட்டால் அது உடலிலேயே தங்கி அப்பெண்ணின் உடல்நிலை பாதிப்படையும் அதனால் தான் அந்த நாட்களில் கோவிலுக்கு செல்ல வேண்டாம்



என்றார்கள் நம் முன்னோர்கள்.

அது மட்டுமன்றி உருவாக்கப்பட வேண்டிய ஒரு உயிர், "தான்" கலைந்து எதிர்மறை ஆற்றலாக வெளியேறுகின்றது. ஆகவே அந்த உயிருக்கு கோவிலின் கர்பக்கிரகத்தில் இருக்கும் மூலவரின் நேர்மறை ஆற்றலை எதிர்க்க கூடிய சக்தி உள்ளது எனவும் அவர்கள் நம்பியதாக ஆராய்ச்சி முடிவுகள் சொல்கின்றன.

அது காலப்போக்கில் தீட்டு என திரிவடைந்த கருத்தாக மாறிவிட்டது.

மாதவிடாய் (menses) நாட்களில் வெளியே எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்ற நம் முன்னோர்களின் கூற்றின் அர்த்தம் என்ன?

அந்த காலங்களில் நமது மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் சமூகத்து பெண்கள் வயல் மற்றும் காடுகளில் சென்று வேலை செய்தார்கள். பொதுவாக காட்டு விலங்குகளுக்கு மோப்ப சக்தி அதிகம். ஒரு கிலோ மீற்றர் தொலைவிற்கு அப்பாலும் அவை இரத்த வாடையை மோப்பம் பிடித்து விடும்.

அந்த நாட்களில் ஒரு பெண் அப்படி வெளியே சென்றால் அவள் உடலிலிருந்து வெளியேறும் இரத்தத்தின் வாடையை மிருகங்கள் மோப்பம் பிடித்து விட்டால், அந்த மிருகங்களால் அவளுக்கும் அவளை சுற்றி இருப்பவர்களுக்கும் ஆபத்து. அதனால் தான் அந்த வீட்டுக்குள்ளயே இருக்க வேண்டும் என்றார்கள்.

பெரும்பாலான வீடுகளில் இன்றும் மாதவிடாய் (menses) நாட்களில் பெண்களை சமையல் செய்வது மற்றும் வீட்டு வேலைகள் செய்வது போன்றவற்றை செய்ய வேண்டாம் என்கிறார்கள். அது தீட்டு என்று அவர்களை ஒதுக்கி வைப்பதாக நாம் சொல்கிறோம். ஆனால் உண்மையில் அதன் அர்த்தம் அதுவல்ல.

பெண்கள் தம் வாழ்நாள் முழுவதும் யாரோ ஒருவரை பராமரித்து கவனித்துக் கொள்ளும் வேலையை செய்து கொண்டே இருக்கிறார்கள். ஆகவே ஒரு மாதத்தில் அந்த 7 நாட்களாவது அவர்கள் ஓய்வாக இருக்க வேண்டும். அத்துடன் அவர்களின் உடலிலிருந்து சக்தி வெளியேறுவதால் அவர்களுக்கு ஓய்வு அவசியம். இந்த காரணங்களுக்காக தான் நம் முன்னோர்கள் மாதவிடாய் (menses) நாட்களில் பெண்கள் வீட்டு வேலைகளை செய்வதை தவிர்த்தார்கள்.

மதங்களும் விஞ்ஞானமும் அடிப்படையில் ஒரே கருத்தைத்தான் சொல்கின்றன. அதை மேலோட்டமாக பார்க்கும் போது சில கருத்துக்கள் மூட நம்பிக்கை போல் தோன்றும். அவற்றின் ஆழ்ந்த அர்த்தங்களை நாம் தெரிந்து கொள்வது நல்லது.

பெரும்பாலும் நம் முன்னோர்கள் சொல்லி வைத்த கருத்துக்களும் கட்டுப்பாடுகளும் இன்றைய காலத்திற்கு பொருந்துவதில்லைதான்.

---

# ஜீன்ஸ்

## சிறுகதை

அது ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறுகளில் ஜீன்ஸ் அணியும் பெண்களை டீ வி யில் மட்டுமே பார்த்த ஊர் . ஒவ்வொரு ஊரிலும் ஒரு சில பெண்கள் தேவதை அந்தஸ்துடன் இருப்பார்கள். அப்படி தேவதை போல அந்த ஊர் பையன்களின் மனசில் இருந்தவள் மாலதி.

இரண்டு அண்ணன்மாருக்கு தங்கச்சியாக பிறந்தவள் என்ற செல்லம் வேற.



பக்கத்துத் தெருவில் வசிக்கும் கந்தையாவின் மகன் ஜேர்மனியில் இருக்கிறான். அவனோடு ஊருக்கு வந்திருந்த அவனின் ரெண்டாவது மகள் ஸ்ருதிதான் மாலதியின் மனதில் அந்த ஆசையை விதைத்தாள்.

ஒருநாள் ஸ்ருதி ஜீன்ஸ், டீ சேர்ட் கருப்புக்கண்ணாடி போட்டுக்கொண்டு நெஞ்சை நிமிர்த்தி நடந்து போனதைப் பார்த்தபோதுதான், பெண்களும் நிஜத்தில் இப்படி கம்பீரமாக

**சிவச்சந்திரன் சிவஞானம்**

துணிச்சலாக நடந்து போகலாம் என்று அறிந்துகொண்டாள் மாலதி.

அதுவரை மாலதி அணிந்திருந்த உச்ச பட்ச நாகரிக உடை என்றால் பாவாடை சட்டைதான். அதிலும் ஒரு பாவாடை முழுங்கால் அளவுக்கு இருக்கு என்று அப்பாவும் அண்ணனும் பேசியதுக்கு அப்புறம் கணுக்காலுக்கு மேல் பாவாடை கூடப் போட்டதில்லை.

ஆனாலும் ஸ்ருதியைப் பார்த்த அந்தக் கணத்தில் மாலதியின் மனதில் தானும் ஒரு முறையாவது ஜீன்ஸ் டீ சேர்ட் போட்டுப்பார்த்துவிட வேண்டும் என்று உறுதியெடுத்துவிட்டாள்.

அந்தக் காலத்தில் டவுன் கடையில் கூட பெண்களுக்கான ஜீன்ஸ் வாங்குவது கஷ்டம். டீ சேர்ட் வேண்டுமென்றால் வாங்கலாம். ஆனால் ஸ்ருதி போட்டிருந்தது போல கழுத்து இறக்கமான டீ சேர்ட் வாங்குவது கஷ்டம், வாங்கினாலும் போடுவதை கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாது.

மாலதி தன் ஆசையை ஒருநாள் அம்மாவிடம் சொல்லிவிட்டாள்...

'அம்மா'

'என்ன?'

'அன்று ஸ்ருதி அக்கா போட்டுப்போன உடுப்பைப் பார்த்தாயா?'

ம்ம்ம் என்னதான் வெளிநாட்டில இருந்தாலும், ஊருக்கு வந்த பிறகாவது கொஞ்சம் ஒழுக்கமா உடுப்பபோட்டுத் திரியலாமே

என்னதான் பிள்ள வளர்த்திருக்காங்களோ?

'

'ஏன் அம்மா அதுக்கு என்ன குறை, சும்மா சினிமா நடிகை மாதிரி நல்லாத்தானே இருந்தா'

'என்ன நல்லா? சும்மா ஆம்பிளைப் பிள்ளைகள் மாதிரி...'

'நீ போம்மா, உனக்கு ஒன்றுமே தெரியாது. டவுனுக்குப் போய்ப் பாரு இப்ப எல்லாப் பொண்ணுகளுமே இப்படித்தான் உடுப்புப் போடுதுகள்.

எனக்கும் ஒருக்கா ஜீன்ஸ் போட்டுப் பார்க்க ஆசையா இருக்கும்மா'

'உனக்கு விசர் பிடிச்சிட்டா பிள்ள, உன்ட அண்ணன்மார் உன்னை அடிச்சே கொல்லுவானுகள்.'

இது வேலைக்காகாது........ஒரே வழி சின்ன அண்ணனின் ஜீன்ஸையும் சேர்ட்டையும் ஒருக்கா போட்டு கண்ணாடியில் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

'இங்க பாரும்மா',

மாலதி சின்ன அண்ணனின் ஜீன்ஸைப் போட்டு இருந்தாள். அந்த ஜீன்சின் பெரிய இடுப்பை அவள் போட்டிருந்த அண்ணனின் டீ சேர்ட் மறைத்திருந்தது.'

'ம்ம்ம் கோமாளி மாதிரி இருக்கு, சின்னவன் வாறதுக்கு முன்னமே கழட்டி வை.'

அதுதான் மாலதி ஜீன்ஸ் போட்டு கடைசியாய் அவள் அம்மா பார்த்த தருணம்.

அவள் இயக்கத்தில சேர்ந்த பிறகு ஒவ்வொரு நாளும் ஜீன்ஸ் போட்டு, சேர்ட்டை உள்ளே விட்டு, பெல்ட் கட்டி ஸ்ருதியை விட கம்பீரமாக இருந்தாலும் அவள் அம்மா அந்தக்கோலத்தில் அவளைப் பார்த்ததில்லை.

இறக்கும் போது கூட அவள் ஜீன்ஸ்தான் போட்டிருந்தாள். அவள் இறந்த பின் இராணுவம் எடுத்து கசிந்த போட்டோ ஒன்றையும் அவள் அம்மா பார்த்திருந்தாள். அதில் அவள் போட்டிருந்த ஜீன்ஸ் இருக்கவில்லை.

தொடர்ச்சி...

## எம்.ஐ.எம்.சாக்கீரின் ''சம்மாந்துறை இடப்பெயர் வரலாறு''

அடிப்படையாக வைத்து எப்படித் தோன்றுகின்றன என்பது விரிவாக ஆராயப்படுகின்றது. 'தொல்பொருளாய்வில் காணப்படாததும் வரலாற்றுச் சான்றுகளில் திரிபடைந்து அல்லது புறக்கணிக்கப்பட்டுக் காணப்படுவதுமான மொழியியற் செய்திகளை இடப்பெயர்கள் முழுமையாகத் தருகின்றன', 'வரலாறு மௌனமாகும் போது இடப்பெயர்கள் வாய்திறந்து பேசக்கூடும்' முதலான சிறப்பான மேற்கோள்களுடன் இவ்வத்தியாயம் விறுவிறுப்பாக நகர்கிறது.

இரண்டாவது அத்தியாயமான 'சம்மாந்துறை', பண்டைய கிழக்கிலங்கை வரலாற்றிலும், வாணிப உலகிலும் அது பெற்றிருந்த முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டியபடி ஆரம்பமாகிறது. சன்னாதிபுர ராசன் (ஜனநாதபுரம் – இன்றைய பொலனறுவை) காலத்தைச் சேர்ந்ததாகச் சொல்லப்படும் 'கலியாணச்செப்பு' எனும் கவிப்பாடல், அதன் ஆரம்பத்தில் அமர்ந்து ஆர்வத்தைக் கூட்டுகிறது.

சம்மாந்துறை நாமவியல் எனும் அடுத்த பகுதியில், அதன் சொற்பிறப்போடு இணைக்கப்படும், சம்பா, செம்மண், சாமான், சம்மான்காரர், சம்பான் ஆகிய சொற்கள் விரிவாக ஆராய்கின்றது. மட்டக்களப்பு மான்மியத்தின்படி, பழைய மட்டக்களப்பு நகர், வாவியின் தென் அந்தத்திலிருந்தது என்பது சுட்டிக்காட்டப்பட்டு, அதற்கு, இன்றும் சம்மாந்துறையிலுள்ள 'மட்டக்களப்புத்தரவை' எனும் கிராம சேவகர் பிரிவும் வேறு பல வரலாற்றாவணங்களும் சான்று காட்டப்படுகின்றன.

அடுத்து, சம்மாந்துறையிலுள்ள 'துறை' என்பது, இன்று சம்மாந்துறையின் வடக்கே உள்ள 'அல்லை' எனும் களப்புப் பகுதி தான் என்பது, புவியியல் சான்றுகளின் மூலம் இனங்காட்டப்படுகின்றது. சம்மாந்துறையின் போக்குவரத்து மற்றும் வணிக முக்கியத்துவத்தை நிரூபிக்க வீரமுனை சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலயம், சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல் என்பன சார்ந்த தொன்மங்கள் வரலாற்றுப் பார்வையில் எடுத்தாளப்படுகின்றன. கூடவே, இலங்கை வரலாற்றில் தவிர்க்கமுடியாத இடம்பெற்ற பிலிப்பஸ் பால்டியஸ், டி ஒய்லி, ஸ்பில்பேர்கன், ஆர்.எல்.புரோகியர், தொலமி உள்ளிட்ட ஐரோப்பியப் பயணிகள் மற்றும் வரலாற்றாசிரியர்களின் குறிப்புகளில் சம்மாந்துறை இடம்பெற்றுள்ளமை சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றது.

இனி, சம்பா, செம்மண், சாமான், சம்மான் முதலிய பெயர்கள் எவ்வாறு சம்மாந்துறை என்ற பெயரோடு பொருந்திப்போகின்றன என்பது தர்க்கபூர்வமாக ஆராயப்பட்டு, சம்மான் என்ற கந்தோனிய மொழிப் பெயரே பொருத்தமானது என்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படுகின்றது. இந்த நிரூபணத்துக்காக பயன்பட்டுள்ள பிறமொழி ஆவணங்கள், இணைக்கப்பட்டுள்ள படங்கள், தரப்பட்டுள்ள சான்றுகளைக் காணக்காண நமக்கும் வியப்பில் விழிகள் விரிகின்றன.

அதில் குறிப்பிடத்தக்க ஒன்று, கிழக்கிலங்கைக்கே சிறப்பான குடிவழிப் பாரம்பரியத்தை இன்றும் கட்டிக்காக்கும் மண் சம்மாந்துறை. இஸ்லாமியக் கிராமங்களிலே அதிகளவு குடிகளைக் கொண்ட ஊரான சம்மாந்துறையில், 'சம்மானோட்டிகுடி' என்ற குடியை இன்று அவதானிக்கமுடியவில்லை என்ற குறிப்பும், 'இன்றைய சேர் முஹம்மது குடியின் பழைய பெயர் சம்மானோட்டிகுடி' என்பதை நூலாசிரியர் விவரிக்கும் பாங்கும், அவரது ஆய்வுத்திறனுக்கு ஆதாரமாக சுட்டிக்காட்டப் போதுமான ஒரு சான்று.

பின்னிணைப்புகள் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் கிழக்கிலங்கைப் பண்பாட்டு விரும்பிகளுக்கும் அற்புதமான விருந்தாக அமையக்கூடியவை. ஒவ் கெட்டே எனும் டானிஷ் பயணியின் சம்மாந்துறையூடான கண்டிப்பயண வரைபடம், சம்மாந்துறை முஸ்லிம்கள் மத்தியில் இன்றுள்ள குடிகள், சம்மாந்துறையின் காலவரிசைப்படுத்திய பெயர் அட்டவணை, கவி முதலிய கிராமிய இலக்கியங்களில் சம்மாந்துறையின் பெயர், அங்குள்ள ஏனைய இடப்பெயர்கள் என்பன மானுடவியலாளரும் சமூகவியலாளரும் மேலும் மேலும் மூழ்கி முத்தெடுக்கக்கூடிய கடல்.

தொடக்கத்திலேயே கூறியது போல, ஒரு ஆய்வு, பக்கச்சார்பின்மை - தொன்மங்களை பகுப்பாய்வுக்குட்படுத்தல் - காலவரிசைப்படுத்தல் என்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் போது, அது கூறும் வரலாறு முழுமையானது, குறைகளேதும் அற்றது என்று உறுதியாகச் சொல்லலாம். அந்த விதத்தில் சம்மாந்துறையின் இடப்பெயரை பல்வேறு சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தும் இச்சிறுநூல் ஆய்வுலகில் தனக்கென ஓரிடத்தை தக்க வைத்துக்கொள்கிறது. அதை மிக இளம்வயதிலேயே எழுதிச் சாதித்ததன் மூலம் நண்பர் சாக்கீர் எதிர்கால வரலாற்றுலகில் தனக்கெனக் காத்திருக்கும் இன்றியமையா இடத்தையும் சுட்டிக்காட்டுகிறார். இதைப் பின்பற்றி, சம்மாந்துறை மாத்திரமன்றி இலங்கை தொடர்பான, இலங்கை முஸ்லீம்கள் தொடர்பான, விரிவான வரலாற்று நூல்கள் எழ வேண்டும். ஆசிரியரும் அதில் தன் பங்களிப்பைத் தொடரவேண்டும். அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் அப்பெருஞ்செயலை இயற்றுவதில் அவருக்குத் துணையிருக்கட்டும்.

நூல்: சம்மாந்துறை - பெயர் வரலாறு
ஆசிரியர்: எம்.ஐ.எம்.சாக்கீர்
வெளியீடு: சம்மாந்துறை வாழும் கலை இலக்கிய வட்டம்

வாசிக்க: நூலகம் வலைத்தளம் (https://tinyurl.com/SaakirSammanthurai)

## சிறகுநுனி குறுந்திரைப்படப் பயிற்சிப்பட்டறை 2019

கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் நல்லுறவை மீளக் கட்டியெழுப்பும் குறுந்திரைப்படங்களை இளம் தலைமுறையினரின் பங்களிப்புடன் உருவாக்கும் செயற்திட்டம் ஒன்றை சிறகுநுனி கலை, ஊடக மையம் முன்னெடுக்கவுள்ளது.

இதற்கென மட்டக்களப்பில் நடைபெறவுள்ள முழுமையான திரைப்படப் பயிற்சிப் பட்டறையில் இணைந்து கொள்ள விரும்புவோர் திரைப்படத்துறையில் தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தும் விபரங்களுடன் எதிர்வரும் 31.01.2019க்கு முன் விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சிப் பட்டறையில் உரிய ஆற்றலை வெளிப்படுத்துவோர் சகல தொழிநுட்ப வளங்களுடன் குறுந்திரைப்படம் ஒன்றை எழுதி இயக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு: Sirahununi Centre for Arts and Media, W29/9, A.L.S. Mawatha, New Kattankudy -06.

0764 475 375, fb/ sirahununi, sirahununi@gmail.com

## மட்/ கோட்டைமுனை சிரேஸ்ட பிரஜைகள் சங்கப் பொதுக்கூட்டம்

(மட்/நிருபர் திருவரங்கன்)

மண்முனை வடக்கு கோட்டைமுனை கிராமசேவையாளர் ஜயந்தனின் வழி நடத்தலில் 12.01.2019 விஸ்வகர்ம கலாசார மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது அதில் பின் வருவோர் நடப்பு வருட நடத்துனர்களாக தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் சி.சிவலிங்கம்

- உபதலைவர் இ.கிருஸ்ணமூர்த்தி
- செயலாளர் பூ.சத்திவேல்
- உபசெயலாளர் திருமதி.விஜயகுமாரி இரட்ணராஜா
- பொருளாளர் இரா.தவராஜா
- ஆகியோருடன் வே.இராமநாதன்
- சரவணபவ சதாசிவம்
- கி.சன்முகலிங்கம்
- ஜே.பி.செல்லர்
- திருமதி.ஜே.ஈ.பார்த்லட்
- ந.பிரபாகரன்
- திருமதி.அ.இரட்ணகமலாஜினி
- ஆகிய ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி...

## தரப்படுத்தப்பட்ட அதிபர்கள் நியமிப்பதை நிறுத்தவும்! ஆளுநரின் உத்தரவுப்படி கல்விச்செயலாளர் சுற்று நிருபம்

எவ்வாறிருப்பினும் 3 வருடத்திற்கும் குறைந்த சேவைக் காலத்தைக் கொண்ட ஆசிரியர் சேவையைச் சேர்ந்த கடமை நிறைவேற்று அதிபர்கள் உள்ளபாடசாலைகளுக்கு தரப்படுத்தப்பட்ட அதிபர்களை நியமிப்பதில் தடையில்லை.

இதேவேளை 1ஏபிசி மற்றும் 1சி பாடசாலைகளுக்கான அதிபர் விண்ணப்பங்களைகல்விச் செயலாளருக்கும் வகை 2 பாடசாலைக்கான விண்ணப்பங்களைமாகாணக் கல்விப்பணிப்பாளருக்கும் வகை 3 பாடசாலைகளுக்கான விண்ணப்பங்கள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

தொடர்ச்சி...

## கிழக்கு அபிவிருத்திக்கு கிடைத்த வாய்ப்பை தவறவிடக் கூடாது

சென்று சந்திப்பதையே வழக்கமாக கொண்டிருந்தார். இது தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற குழுவிலும் பொதுக் குழுவிலும் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவுக்கோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொதுக்குழுவுக்கோ தெரியாமல் சம்பந்தன் அவர்கள் மகிந்த ராசபக்சவை சந்திக்க கூடாது என்றும் மகிந்த ராசபக்சவையோ அல்லது அரச தரப்பையோ சந்தித்தால் சந்தித்ததன் நோக்கம் என்ன விடயம் பேசப்பட்டது என்ற விடயங்களை தெரியப்படுத்த வேண்டும் என ஏனைய உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்த போதிலும் சம்பந்தன் அவர்கள் மகிந்த ராசபக்சவை அடிக்கடி சந்தித்தார். சந்தித்துப் பேசிய விடயங்களை ஏனைய உறுப்பினர்களுக்கு வெளிப்படுத்தியது கிடையாது.

போரினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண தமிழ் பிரதேச அபிவிருத்திக்கு கிடைத்திருக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம் தான் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி செயலணியாகும்.

இதன் ஆயுள் காலம் ஒரு வருடத்திற்கு மேல் நீடிக்காது.

இந்நிலையில் துரிதமாகவும் சிறப்பாகவும் செயல்பட வேண்டிய பொறுப்பு வடக்கு, கிழக்கு அபிவிருத்தி செயலணிக்கு உரியதாகும். இந்தப் பணிக்கு கிழக்கு இணைப்பாளராக பொருத்தமான ஒருவர் நியமிக்கப்படாமை கிழக்கின் அபிவிருத்திக்கு பெரும் பின்னடைவு என்றே பலராலும் விமர்சிக்கப்படுகின்றது.

# அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய விசேட பூசை நிகழ்வுகள்

## 2019ம் ஆண்டு - 2ம் மாதம

16/02/2019 சனிக் கிழமை ஏகாதசி விரதம்

18/02/2019 திங்கட் கிழமை நடேசர் அபிசேகம்

19/02/2019 செவ்வாய்க் கிழமை பூரணை விரதம் - மாசி மகம்

22/02/2019 வெள்ளிக் கிழமை சங்கடகர சதுர்ஷ்தி விரதம

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)



அரங்கம் செய்திகள்
விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life
ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய
உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...
PHARMACY – TIP TOP HEALTH CARE
SUPER MARKET – CITY CENTRE
BUDGET SHOP – CASH & CARRY, Young Forever
CAFETERIA – FCC Cafe
இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு. TP: 0652222722, Hotline: 0772072722
New Arrivals



